5667

JPL

C5667

# முன்பள்ளிக் கல்வி
# கலைத் திட்டம்

KOHA
JPL

எழுத்தாக்கம்:
திரு. ச. சுப்பிரமணியம்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

131556

வெளியீடு:
தமிழீழ கல்விக் கழகம்
1995

379/2

# முன்னுரை

பள்ளிக் கல்விக்கு தொடக்கநிலைக் கல்வியான முதனிலைக்கல்வி அடித்தளமாக அமைகிறது. உலகில் பல்வேறு நாடுகளிலும் பள்ளிக்குச் செல்வதற்கு முன்னர் சிறார்களுக்கு முன்பள்ளிக் கல்விச்செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்றன. பள்ளிக்கல்வியைப் பயிலச் செல்வதற்கு முன்னர் பள்ளிக்கல்வியில் ஆர்வத்தையும் பிடிப்பையும் ஏற்படுத்துவதற்காகவும், எண், எழுத்து, ஆக்கத்திறன், அழகியற் செயற்பாடுகள போன்றவற்றைச் சிறார்கள் எளிதாகப் பயில்வதற்கு ஏற்ற உடல், உள உணர்வுகளையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதற்காகவுமே முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

பள்ளிக்கல்வி சமச்சீரான பொதுப்பாடத்திட்டப்படி கற்பிக்கப்படுகின்ற நிலையில், அதற்கு அணியமாக்குகின்ற முன்பள்ளிச் செயற்பாடுகளை அனைத்துச் சிறார்களுக்கும் பொதுவான ஒரு பாடத்திட்டத்தினூடாகக் கிடைக்கச் செய்வது இன்றியமையாதது என்பதை உணர்ந்த தமிழீழக்கல்விக்கழகம் அதற்கு ஏற்ற ஒரு பாடத்திட்டத்தை அமைப்பதற்கு முன்பள்ளிக்கல்விச் செயற்பாடுகளோடு நீண்டகாலத் தொடர்புடைய கல்வியாளர்களைக் கூட்டி ஆராய்ந்தது. அதனையடுத்து இதுவரை நடைமுறையிலிருந்த பல்வேறு நிறுவனங்களின் பாடத்திட்டங்களையும் ஆண்டு ஒன்றின் பள்ளிக்கல்விப் பாடத்திட்டத்தையும் கருத்துக்கெடுத்து இந்த முன்பள்ளிக் கலைத்திட்டம் ஆக்கப்பட்டுள்ளது.

பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு ச. சுப்பிரமணியம் அவர்கள் நீண்டகாலத்தை இதற்கென ஒதுக்கி, இந்த முன்பள்ளிக்கலைத்திட்டத்தை ஆக்கியளித்திருக்கின்றார். தனது பல்வேறு கடமைப்பளுவுக்கிடையே இக்கலைத்திட்டத்தை ஆக்கித்தந்தபிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியம் அவர்களையும், அவருக்குத்துணையாய் இருந்து கலைத்திட்ட ஆக்கத்திற்கு பலவேறுவகைகளிலும் உதவியபிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு ஆ. சிவானந்தன் அவர்களையும் பாராட்டுவதோடு; இந்த முன்பள்ளிக் கலைத்திட்டத்தைப் பயன்படுத்தி அனைத்துச் சிறார்களுக்கும் பள்ளிக்கல்வியினை எளிதாக்க வழிகோலுவோமாக.

வெ. இளங்குமரன்
பொறுப்பாளர்,
தமிழீழக் கல்விக் கழகம்

KOHA
JPL

# அணிந்துரை

‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே’, ‘இளமையிற் கல்வி சிலையில் எழுத்து’, ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?’, ‘விளையும் பயிரை முளையிலே தெரியும்’, ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்’ ‘முற்கோணல் முற்றும் கோணல்’, ‘பதறாத காரியம் சிதறாது’, ‘தொட்டது துலக்கும்’ ‘கைபட்ட இடம் கைலாயம்’ என்பன ஆன்றோர் அநுபவ மொழிகள். இத் தொடரியங்கள் முதிர்ந்த பொருள் பொதிந்தவை. முன்பள்ளிக்கல்விக்கான எண்ணக்கரு உருவாக்கத்துக்கு உந்து சக்தியைக் கொடுப்பவை.

அடிப்படை ஆதாரக் கல்வியாக அண்மைக் காலங்களிற் கூர்ப்படைந்து வரும் கல்விப் பருவமே முன்பள்ளிக் கல்விக்குரிய 3+, 4+, 5+, வயதுடையோரின் பருவமாகும். இச் சிறார் வீட்டிலே குடும்ப உறுப்பினரின் அரவணைப்பில் இருந்து விடுபட்டு, வெளியுலகிலே காலடி எடுத்து வைக்கின்றனர். அறிவுலகின் அடிவான விசாலிப்பில் புதிய அநுபவங்கள் பெறும் அரிய வாய்ப்புகள் முன்பள்ளியில் உண்டாகின்றன. சகபாடிகளின் புத்துலகம் இவர்களுக்குப் புதிது.

முன்பள்ளிச் சிறாரின் மூலதனம் வரையறையானது. சுகநலம் நிரம்பிய உடல் வாகு, மலருகின்ற உள்ளம் - இவை இரண்டுமே அம் மூலதனம். இலகுவில் அடையாளம் காணக் கூடிய ஒரு சில சிறார் மட்டுமே இதற்கு விதிவிலக்காகலாம். இவர்கள் சிறப்புக் கல்வி மூலம் கவனிக்கப்பட வேண்டியோராய் இருப்பர். இவர்கள் தவிர ஏனைய அனைத்துச் சிறாரும் விளையாட்டு, ஆடல், பாடல் ஆகியவற்றில் விரும்பி ஈடுபடவே செய்வர். இம் முத் திறன்களினடியாகவே சிறார்களிடையே ஏனைய அனைத்து திறன்களையும் வளர்த்தெடுக்க முடியும். இதனை மறந்து கைக்கொள்ளப்படும் பல்வேறு மற்று உயர் ஆற்றல் மட்டத்து அணுகுமுறைகளும் உத்திகளும் பலவீனமானவை - இலக்குத் தவறியவையாகவே இருக்கும்.

மேற்படி இந்தப் பேருண்மையினை வித்தாக்கி வளர்த்தெடுக்கப்படும் முன்பள்ளிக் கல்விக் கலைத் திட்டங்கள் மட்டுமே வருகின்ற இருபத்தோராவது நூற்றாண்டுக்குப் பொருந்தமாக அமையும். இதனை மனங் கொண்டு கருவில் உருவாகி வந்து, வயது அளவிலே வளர்ந்து அரும்பாகிப் பூத்துக் காய்த்துக் கனிந்து தமிழீழத்திற்குப் பொருத்தமான - சமூகக் கவிவு நிலைக்கெட் பட்ட நுட்ப நுணுக்கங்களுடன் நெய்யப் பெற்று ஒரு பொதுப் பாடத்திட்டம் வடிவமைந்திருக்கிறது. இது நமது மண்ணின் மாண்புக்கு சாலம் திரட்டிய ஒரு பெரும் பேறு. சமவாய்ப்பும், சமசந்தர்ப்பமும் நூறு வீதச் சித்தியும் நோக்கிய பெரும் எடுப்பு என்றே பெருமிதம் கொள்ள வேண்டும். மலர்க புது யுகம், சிறார்கள் செழிப்புறுக.

வணக்கம்.

இ. சிவானந்தன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வி அபிவிருத்தி,
யாழ்ப்பாணம்.

# பொருளடக்கம்

1. முன்னுரை
2. அணிந்துரை
3. முன்பள்ளிக் கலைத்திட்டம் - ஆசிரியர் பார்வையில்...

3 - 1 அறிமுகம்

3 - 2 முன்பள்ளிக்கல்வி

3 - 3 முன்பள்ளிக் கல்விக்காலம்

3 - 4 முன்பள்ளிக் கல்வியில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்

3 - 5 முன்பள்ளிக் கல்விச்சீரமைப்பில் மேற்கொள்ளவேண்டியவை

3 - 6 முன்பள்ளிகளில் தற்போது பயன்படுத்தும் பாடத் திட்டங்கள்

3 - 7 புதிய முன்பள்ளிக் கல்விக் கலைத்திட்ட அமைப்பு

4. ஆண்டு 1-5 வரையிலான ஆரம்பக்கல்வித்தேர்ச்சி இலக்குகள்

5. முன்பள்ளிக் கல்வியின் நோக்கமும் குறிக்கோள்களும்

6. முன்பள்ளிக் கல்வியின் குறிக்கோள்களும் உப குறிக்கோள் களும்

7. முன்பள்ளிக்கல்வி நோக்கம் குறிக்கோள்களைச் சிறாரைச் சென்றடையச் செய்தல்நுட்பம

8. முன்பள்ளிக் கலைத்திட்டமும் ஆண்டு 1 கலைத்திட்டமும்

9. முன்பள்ளிக் கலைத்திட்டமும் வேலைத்திட்டமும்

# 1. முன்பள்ளிக் கலைத்திட்டம்

## 1.1. அறிமுகம்

முன்பள்ளிக் கல்வியானது இன்னமும் முறைக்கல்வித் திட்டத்தினுள் அரசினாற் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எனினும், இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, தனியார் நிறுவனங்களினால் அதனை நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஐந்து வயது ஆனதும் ஆண்டு 01 வகுப்புக்குச் செல்லவுள்ள சிறாருக்குப் பயிற்றப்படும் கல்வியே முன்பள்ளிக் கல்வி ஆகும்.

## !.5. முன்பள்ளிக் கல்வி

மழலையர் கல்வியானது, தாயின் கருவறையிலே தொடங்கிப் பொதுக்கல்விக்கான பாடசாலைக்குச் செல்வது வரையிலான கல்வியைக் குறிப்பதாகும். பிறந்த குழந்தையானது, தனது வீட்டுச் சூழலிலும், அயற் சூழலிலும் பெறும் அனுபவங்களினூடான கற்றலையும் கல்வியென்றே குறிப்பிடுகின்றோம்' இது 'முறையில கல்வி' என வகைப்படுத்தப்படும். காரணம், அங்கு எவ்விதமான திட்டமிட்ட அடிப்படையிலும் அவை கற்பிக்கப்படுவதில்லை. பெற்றார், சகோதரர், உறவினர், ஏலையோரினதும் அறிவுமட்டத்துக்கு அமையவும், எந்தச் சூழலில் குழந்தை வளருகின்றதோ அதற்கு ஏற்ற அனுபவங்களுக்கு அமையவும் கல்விக்கான சந்தர்ப்பங்கள் குழந்தைக்குக்கிடைக்கின்றன. இக்கல்வி அனுபவமானது, குழந்தைக்குக் குழந்தை மாறுபடுகின்றது. இதனாலேயே இவ்வாறான கல்விச் சந்தர்ப்பத்தை முறையில்ல கல்வி என்கிறோம். எனினும், குழந்தையின் இந்த ஐந்து வருட கல்விக்காலத்தையோ, அல்லது படிமுறைப்படுத்திய ஓர் அடிப்படையிற் குழந்தையின் உடல், உள, அறிவு, ஆளுமை வளர்ச்சிகளை மனதிற்கொண்டு, திட்டமிட்ட முறையிற் பயனுள்ளவாறான கல்வியைப் பெறுவதற்கான ஏற்பாட்டையே திட்டமிட்ட முன்பள்ளிக் கல்வி என்கிறோம். மழலையர் பொதுக்கல்விக்கான பள்ளிக்குச் செல்வதற்கு முன்னர், இக்கல்வியைப் பெறுவதனால் இக் கல்வித்திட்டம் முன்பள்ளிக் கல்வி என்னும் பெயரைப் பெறுகின்றது.

## 1.3. முன்பள்ளி கல்விக்காலம்

திட்டமிட்ட முன்பள்ளிக்காலம் எத்தனை ஆண்டுகளுக்கானது என வரையறுத்துக் கூறமுடியாதுள்ளபோதிலும், ஒரு குழந்தையைப் பொறுத்தளவில் மிக அதிகளவு பாசம், பரிவு, பாதுகாப்பு, அடிப்படைத் தேவைகளை நிறைவாக்கல் ஆகிய அம்சங்களை நிறைவு செய்வதில் பெற்றதாயே முதன்மை வகிக்கின்றாள். தாய் பாலையூட்டுவது மட்டுமன்றி, உணர்வையும், பாசத்தையும் கூடச் சேர்த்தே ஊட்டுவதாக உள்ளது. தாய்க்கும் பிள்ளைக்குமுரிய பிணைப்பு அல்லது பாச உணர்வு ஏனையவர்களுடன் சமமாகப் பங்கிடப்படுவதில்லை. ஆனால், தாயில்லாத நிலையில் ஏனையவரால் வளர்த்தெடுக்கப்படும் போது, அதேயளவு பாசத்தை அக்குழந்தை வெளிக்காட்டத் தவறுவதுமில்லை. எனவே, குழந்தையின் முன்பள்ளிக்காலம் அதன் வீட்டுச் சூழலே எனக் குறிக்கலாம். ஆனால், அறியாமை மிக்க பெற்றாரிடமும், பொருத்தமற்ற சூழலிலும் வளரும் குழந்தையின் எதிர்காலமானது, சமூகப் பொருத்தப்பாடுள்ள இலட்சியக் குழந்தையாக அமையாமல் போகக்கூடும். இந்நிலை முழு சமூகத்துக்குமே பாதகமாக அமையக்கூடுமாதலால், குழந்தைகளைத் திட்டமிட்ட முறையிற் சமூக இலட்சியங்களுக்கும், கல்வி நோக்கங்களுக்கும் அமைய வளர்த்தெடுத்தல் முக்கியமாவதால், முன்பள்ளிக் கல்வி, திட்டமிட்ட முறையில் அமைவது அவசியமாகிறது. ஆகக் குறைந்தது ஒருவருடமாவது குழந்தை முன்பள்ளியில் கற்பது மிகப்பொருத்தமானதாகும்.

தற்சமயம் முன்பள்ளிக் கல்வி. மேலை நாடுகளில் பெரும் வளர்ச்சிகண்டுள்ளது. இதனால் கல்விப் பெறுபேறு உயர்ந்து நவீன யுகத்துக்குப் பொருத்தமானவர்களாகச் சிறுவர்கள் இசைவாக்கம் பெற்று வருகின்றனர். எமது பிரதேச மக்களும் அறிவியல் ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் வளர்ச்சியடைவதற்குத் திட்டமிட்ட முன்பள்ளிக் கல்வி பெரும் பங்காற்ற முடியும்.

## 1.4. முன்பள்ளிக் கல்வியில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்

எமது பிரதேசத்தில் ஆண்டு 01ல் சேரும் மழலையரில் 15-20 வீதமானோரே முன்பள்ளிக் கல்விக் கூடங்களிற் பயின்றோராக உள்ளனர். ஏனையோர் வீட்டிலிருந்து நேரடியாகப் பொதுக்கல்விப் பள்ளிக்கு வருவோராக உள்ளனர். இவ்விரு

சாராரும், ஒரே பாடசாலையிற் சேர்ந்து கற்கும் போதும், அவர்களை ஒன்றாகக்கற்பிக்கும் போதும் பெரும் ஏற்றத்தாழ்வுகள் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலை மாற்றப்பட்டு, எல்லா மாணவரும் இக்கல்வித்திட்டத்தின் நன்மையை அனுபவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

## 1.5. முன்பள்ளிக் கல்விச் சீரமைப்புக்காக மேற்கொள்ள வேண்டியன

யாவருக்கும் முன்பள்ளிக் கல்விக்கான ஏற்பாடுகள் செய்யப்படும் அதேவேளை, பின்வரும் அம்சங்களும் முறைப்படுத்தப்பட வேண்டும்.

1. பொதுவான கல்வித்திட்டம் வகுத்தல்.
2. அடிப்படைத் தகுதிமிக்க ஆசிரியர் சேவை.
3. அடிப்படைத் தேவைகள் அடங்கிய பள்ளிக்கூடம்.
4. கலைத்திட்டத்துக்கு அமைவான ஆசிரியர் வழிகாட்டிகள் தயாரித்தல்.
5. பொருத்தமான கட்புலசாதனங்கள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள் தயாரித்தல்.
6. கலைத்திட்டத்துக்கமைவான ஆசிரியர் பயிற்சித்திட்டம்;
7. முன்பள்ளிக் கல்வித்திட்டம் தொடர்பான மேற்பார்வைத் திட்டமும் நிர்வாகக் கட்டமைப்பும் ஏற்படுத்துதல்.
8. முன்பள்ளிக் கல்வி விரிவாக்கத்துக்கான "வளநிலைய" சேவையை ஆரம்பித்தல்.

மேற்கண்ட அம்சங்கள் யாவும், உடனடியாக முறைப்படுத்தப்படுவதில் பல்வேறு தாமதங்கள் இருக்கின்ற போதிலும், சில அம்சங்களை உடனடியாக நிறைவு செய்வது அவசியமாகின்றது. அதன் தொடர்பிற் கடந்த பல ஆண்டுகளாக இத்திட்டத்தோடு ஈடுபட்டதால் கிடைத்த அனுபவங்களைக் கொண்டும், நவீன கற்பித்தல் நுட்பங்கள் பற்றிய ஆய்வுகளின் அடிப்படையிலும் இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 1.6. தற்போது பயன்படுத்தும் பாடத்திட்டங்கள்

தற்சமயம் பல முன்பள்ளிக்கூடங்களிற் பின்பற்றப்படும் பாடத்திட்டங்கள் ஆண்டு 01, 02ஆம் வகுப்புகளிற் கற்பிக்கப்

படும் பாடங்களையும், விடயங்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவை மிகவும் பேராசைமிக்கவையாகும். சிறார்களின் உடல், உள ஆற்றல் வல்லமைகளைச் சரியாக மதிப்பிடப்பெறாமலும் அவர்களின் ஏற்கும் தன்மைகள் கவனத்துக்கு எடுக்கப்படாமலும் பெரும் சுமையை மழலையரிடம் சுமத்துவதாகவுள்ளது. சில பள்ளிகளில் தமிழ் ஆங்கில மொழித்திறனை விருத்தி செய்வதில் பெரும் அக்கறை காட்டப்பட்டு ஏனைய திறன்களை விருத்தி செய்யப் படாமலே விடப்படும் நிலையும் உண்டு.

## 1.7. கலைத்திட்ட அமைப்பு

இவ்வெளியீட்டில் கலைத்திட்டம் மட்டும் எழுதப்பட்டுள்ளது. அதுவும், விடயத்தலைப்புகளாகவல்லாமல், சிறார் அடைய வேண்டிய குறிக்கோள்களை மனதிற்கொண்டு எழுதப்பட்டுள்ளன. எனவே, கலைத்திட்டம் வகுத்தல் மிக அவதானமாகச் செய்யப்படவேண்டிய காரியமென உணரப்பட்டுள்ளது. அத்தோடு ஆண்டு 01ல் பயன்படுத்தப்படும் தற்போதைய பாடத்திட்டமும், இக் கலைத்திட்டத்தில் சமாந்தரமாகக் காட்டப் பட்டுள்ளது. காரணம் முன்பள்ளிக் கல்வி ஆசிரியர்கள் ஆண்டு 01 பாடத்திட்டத்தினை அனாவசியமாகத் தலையில் தூக்கி வைத்துக் கற்பிக்க முனையவேண்டியதில்லை. முன்பள்ளிக் கல்வி பற்றிய விரிவான பாடத்திட்டமொன்று இல்லாமை இக் குறைபாட்டுக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். அத்தோடு முன்பள்ளிக்கூடங்களில் அதிகளவு மாணவர்களை ஈர்க்கும் நோக்கிலும், போட்டித்தேர்வுகளுக்குப் பிள்ளைகளைத் தயார்பண்ணும் நோக்கிலும் அவ்வாறு நடந்திருக்கலாம். எவ்வாறாயினும், இக்குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

முன்பள்ளிக் கல்வி ஆசிரியருக்கு, இக் கலைத்திட்டம் மட்டும் போதியதன்று, இக் கலைத்திட்டம் முன்பள்ளிக் கல்வி நோக்கம், குறிக்கோள்களை அடையத்தக்கவாறு வேலைத்திட்டமாக்கப்பட வேண்டும். வேலைத்திட்ட அடிப்படையிலேயே ஆசிரியர் பாடமுன்னாயத்தம் செய்து கற்பித்தல் வேண்டும்.

கற்பித்தல் என்ற பெயரில், ஆசிரியர் சில பாடவிடயங்களை மாணவர்களுக்கு திணிக்கும் முறைக்கு மாறாக, மாணவர்களைத் திட்டமிட்ட சில செயலனுபவங்களில் ஈடுபடுத்துவ

தன் மூலம் தாமாகவே கற்க, செய்திட்ட முறையிலான கற்பித்தல் முறை மிக உகந்ததென இனங்காணப்பட்டுள்ளது.

கடந்த ஈராண்டுகளாக இக் கலைத்திட்டம் பரீட்சார்த்தமாகக் கற்பிக்கப்பட்டதனால், பெறப்பட்ட அனுபவங்களும், மதிப்பீடும் திருப்தியளிக்கக்கூடியதாக உள்ளது. இதன் பொருட்டு பெரிதும் உதவியவர் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்கள் எனக்கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விளவயதினருக்குரிய சமய வாழ்க்கைக்கான அனுபவங்களைப் பொதுப் பாடத்திட்டமாக வகுப்பதிலுள்ள இடர்ப்பாடுகள் காரணமாக நேரடியாக எழுதப்படவில்லை. ஆனால், எல்லாச் சமயங்களும் வலியுறுத்தும் அறநெறிக் கருத்துக்கள் இவ் வயதுக்குரியவர்களுக்குப் பொருத்தமானவையென இனங்காணப்பட்டவை இங்கு சேர்க்கப்பட்டுள்ளன. சிறுவர்களின் கிரகிக்கும் வல்லமைகளை மனதிற்கொண்டு ஆசிரியர்கள் தமது சமய அனுட்டானங்களை அறிவியல் ரீதியில் கடைப்பிடிக்கச் சிறாரை வழிநடத்துவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

வெகு விரைவில் இக்கலைத்திட்டத்துக்கு அமைவான ஆசிரியர் வழிகாட்டி வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் இக் கலைத்திட்டத்தை முழுமையானதாக ஆக்குவதற்கும், சீராக்கம் செய்வதற்கும் உங்கள் ஆலோசனைகள் என்றும் வரவேற்கப்படும்.

க. சுப்பிரமணியம்
பிரதிக் கல்விப்பணிப்பாளர்
1994-07-03

o o o

# 2. ஆண்டு 1 முதல் 5 வரையிலான ஆரம்பக் கல்வித்தேர்ச்சி இலக்குகள்

**ஆண்டு 01 முதல் ஆண்டு 05 வரையான கல்வியை ஆரம்பக்கல்வி என்பர்.**

முன்பள்ளிக் கல்வி, ஆரம்பக்கல்விக்கு முன்னிலையாக அமைவதனால் அதுவும் ஆரம்பக்கல்வி எனவே குறிப்பிடப்படும். ஆரம்பக்கல்வியின் தேர்ச்சி இலக்குகள் பின்வருமாறு அமைந்துள்ளன. அவற்றை நன்கு விளங்கிக் கொண்ட ஒருவராலேயே ஆண்டு 01 ற்கு முற்பட்ட கல்வியை வரையறுத்துக் கொள்ள முடியும் என்ற காரணத்தால் இங்கு அவை விவரிக்கப்பட்டுள்ளன.

## 2.1. எழுத்தறிவு

கருத்துக்களைத் தெளிவாகப் பரிமாறுதல், வாசித்தல், எழுதுதல், எளிதான கணித்தல் திறன் பெறுதல், தாய்மொழியுடன் நாட்டில் பயன்படும் ஏனைய மொழிகளில் அடிப்படை அறிவு பெறுதல்.

## 2.2. ஆரோக்கிய வாழ்வு

உடல், உள, சமூக சுகாகாரத்துக்கு அடிப்படையாக அமையும் பழக்கங்களும், மனப்பாங்குகளும், சிறுபராயம் தொட்டே வளர்த்துத் தனியாளினதும் சுற்றாடலினதும் ஆரோக்கியத்துக்கு உவப்பான நடத்தைக் கோலங்களைக்கொண்ட வாழ்க்கையை நடாத்துவதில் மாணாக்கர் முகப்படல்.

## 2.3. தொழில் நுட்பமும் வேலைப்பயிற்சியும்

எதிர்கால வேலையுலகினுட்புகுவதற்குத் தேவையான கைத்திறன்களை வளர்த்துக்கொள்ளல். புதிய தொழில்நுட்பத்தை மதித்தலும், இயலுமான அளவுக்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொண்டு உழைப்பின் மகிமையை வளர்த்தலும், உழைப்பின் வலிமைபற்றிய உணர்வைப் பெறலும்

## 2.4. அருஞ்செல்வங்கள் பற்றி அறிதல்

சொந்த நாடு, அதன் வளங்கள், அருஞ்செல்வங்கள், மொழி, கலை, பண்பாடுகள் பற்றியும் அறிதல, அவற்றின்

தனித்துவம் ஆகியவற்றை இனங்காணல், அச் செல்வங்களைக் கட்டிய தேசிய வீரர்கள் பற்றிய அறிவைப் பெறுதல், தேசியச் செல்வங்களை மதித்தல்.

## 2-5. மதத்தில் ஈடுபாடும் ஒழுக்கமும்

மதவழிபாடுகளிற் பரிச்சயம் பெறல், தமது மதம், கலை, பண்பாடு, அறநெறி வாழ்க்கை முறைகளில் ஆர்வம் காட்டல், ஏனைய மதங்களை மதித்தல், நற்பிரசையொருவரிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளல். சமயப் பழக்கவழக்கங்கள் பற்றிய பயிற்சியைச் செயல் முறையிற்பெறல், சமயப் பழக்கவழக்கங்களை அறிவியல் ரீதியில் அணுகக் கூடியவராதல்.

## 2 6. சுற்றாடலைப் புரிந்துணர்தல்

இயற்கையின் கொடைகளைப் பற்றியும், மனிதனால் ஆக்கப்பட்டவைகள் பற்றியும், நாம் வாழும் சுற்றாடல் பற்றியும் அடிப்படை விளக்கம் பெறல், அதனூடாக விஞ்ஞான பூர்வமாகச் சிந்திக்க முற்படல், இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் வேண்டும் எனும் எண்ணக்கருவை வளர்த்தல்.

## 2-7. சிறுவர்களின் ஆர்வங்களை விருப்பங்களை வளர்த்தல்

ஓய்வு நேரத்தைப் பயனுள்ள விதத்திலும், பொருளுள்ள விதத்திலும் செலவிடுவதோடு நுண்ணாய்வுத் திறன்களையும் இரசனையையும் வளர்த்துக்கொள்ளல். அழகியற் செயற்பாடுகள் மூலம் பள்ளிக்கூடத்தை விருப்பத்துக்குரிய ஓரிடமாக மாற்றுதல்.

## 2-8. தேச ஒற்றுமை


தேச ஒற்றுமையைப் பேணுவதற்காக வெவ்வேறு மதங்களைப் பின்பற்றும், வெவ்வேறு மொழிகளைப் பேசும் அனைவரும் சமாதானத்துடன் விட்டுக்கொடுத்து வாழ்தல்.

## 2-9. அறநெறி வளர்ச்சி

உயிருள்ள உயிரற்ற சுற்றாடலிற் கருணையுடனும் கண்ணியத்துடனும் வாழப்பழகுதல். ஒவ்வொருவரும் தத்தமக்கிடையே பரஸ்பர உணர்வுடன் சமுதாயத்தில் வாழப் பரிச்சயம் பெறல்.

## 3. முன்பள்ளிக்கல்வி நோக்கமும் குறிக்கோள்களும்

**நோக்கம்** **குறிக்கோள்கள்**



# 4. முன்பள்ளிக் கல்வியின் குறிக்கோள்களும் - உபகுறிக்கோள்களும்

இங்கு குறிக்கோள், உப குறிக்கோள்களாக
வகுத்துக் காட்டப்பட்டுள்ளபோதும்
உண்மையில் அவை ஒவ்வொன்றும்
ஒருங்கிணைந்தவையேயாகும்.

முன்பள்ளிக் கல்வியைக் கற்கும்மாணவர் ஒவ்வொருவரும் கீழ்க்காணும் குறிக்கோள் - உபகுறிக்கோள்களை அடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

| குறிக்கோள் | உப குறிக்கோள்கள் |
| --- | --- |
| 4.1. பொருளறிவை வளர்ச்சியுறச் செய்தல் | 4.1.1. சுற்றாடலைப் புரிந்து கொள்ளக் கூடியவராவர். |
| | 1.2 அறிவியல் அணுகுமுறையுடையவராவர். |
| | 1.3 தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளியிடக்கூடியவராவர். |
| | 1.4 அடிப்படைக் கணக்கிடுதலுக்கான எண்ணக்கருக்கள் உடையவராவர். |
| | 1 5 இலக்கங்கள், கேத்திரகணித உருவங்களுக்கான உறுப்புக்களைச் சுயாதீனமாக வரையக் கூடியவராவர். |

1.6
எழுத்துறுப்புக்களைச் சுயாதீனமாக வரையக் கூடியவராவர்.

1.6
தன்னம்பிக்கையுடையவராவர்.

**4.2. செயற்திறனை வளர்ச்சியுறச் செய்தல்.**

4.2.1
பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடியவராவர்;

2.2
வாழ்க்கைத்திறன்களையுடையவராவர்.

2.3
ஆக்கத் தொழிற்பாடுடையவராவர்.

2.4
பயனுள்ள பொருள், சேவையுற்பத்தி செய்யக்கூடியவராவர்.

2.5
தன்னம்பிக்கை யுடையவராவர்.

**4.3. நல்லொழுக்கத்தை வளர்ச்சியுறச் செய்தல்.**

4.3.1
நாளாந்த வேலைப் பழக்கங்களில் ஈடுபடக் கூடியவராவர்.

3.2
நல்லொழுக்கம் உடையவராவர்.

3 3
சுதந்திர செயற்பாடுடையவராவர்.

3.4
சமயப் பழக்கவழக்கங்களில் ஈடுபாடு உடையவராவர்.

4.4.
தேச, சமூக, பண்புகளை வளர்ச்சியுறச் செய்தல்.

4.4.1
சுற்றாடலைப் பயன்படுத்தக் கூடியவராவர்;

4.2
சுதேச உணர்வுடையவராவர்.

4.3
உடல், உளக் கட்டுப்பாடுடையவராவர்.

4.4
சமூகத்துடன் இசைவுபடக் கூடியவராவர்.

4.5
அயலாரை நேசிக்கக் கூடியவராவர்;

4.5.
உடல் வளர்ச்சியுறச் செய்தல்

4.5.1
தன்னம்பிக்கை உடையவராவர்.

5.2
ஆரம்ப சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றக் கூடியவராவர்.

5.3
ஐம்புலன்களையும் சிறப்பாகப் பயன்படுத்தக் கூடியவராவர்.

4.6.
அழகுணர் ஆற்றலை வளர்ச்சியுறச் செய்தல்.

4.6.1
இரசனை ஞானம் உடையவராவர்.

6.2
சிறப்பாற்றலை வெளிப்படுத்தக் கூடியவராவர்.

6.3
இசையைக் கேட்பதிலும், இசைப்பதிலும் நாட்டமுடையவராவர்.

6 4
நடனம், நாடகங்களைப் பார்ப்பதிலும், பங்குபற்றுவதிலும் நாட்டமுடையவராவர்.

6 5
சித்திரம், சிற்பம் பார்ப்பதிலும் ஆக்குவதிலும் நாட்டமுடையவராவர்.

6 5
செய்தொழில், சூழல் போன்றவற்றை இரசிக்கக் கூடியவராவர்.

# 5. சிறார்களை முன்பள்ளிக் கல்வி நோக்கம், குறிக்கோள்களை அடையச் செய்யும் நுட்பம்.

முன்பள்ளிக் கல்வியின் நோக்கம், குறிக்கோள்களை மாணவர் அடைய வேண்டுமானால், எவற்றைக் கற்பிப்பது? எவ்வளவு கற்பிப்பது? எப்போது கற்பிப்பது? எவ்வளவு காலத்திற் கற்பிப்பது? எவ்வாறு கற்பிப்பது? எனும் கேள்விகள் எழும். இக் கேள்விகளுக்கான விடைகளாகவே கலைத்திட்டம் அமையும். எனவே, இக் கலைத்திட்டத்தில் அவை நேரடியாக வகைப்படுத்தி எழுதப்படாவிடினும் எவற்றை, எவ்வளவை. எப்போ, எவ்வளவு காலத்தில் எனும் கேள்விகளுக்கு விடையறிய முடியும். எவ்வாறு எனும் கேள்விக்கு ஆசி

ரியர் வழிகாட்டியே உதவும் என்பதோடு, கற்பித்தல் முறையானது ஆசிரியருக்கு ஆசிரியர் மாறுபடும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

5667

## 5 2 காலவேளை

இக்கலைத்திட்டம் நாளொன்றுக்கு 3 மணித்தியாலம் கொண்ட 5 நாட்களை ஒரு வாரமாகக் கொண்டு 44 கிழமைகளுக்கு எழுதப்பட்டுள்ளது. (சராசரி 660 மணித்தியாலம்) 4, 5 வயதுடைய சிறாரைக் கொண்ட முன்பள்ளிகள், ஒவ்வொரு வயதுக் குழுவினரையும் வேறுபடுத்தித் தனித்தனி குழுவாகக் கற்பித்தலே மிக உகந்தது.

இக் கலைத்திட்டத்திற் கூறப்பட்டுள்ள குறிக்கோள்களை 4 வயதுச் சிறார் பூரணப்படுத்தியிருக்க வேண்டியது அவசியமல்ல. ஆனால், 5 வயதைப் பூர்த்திசெய்யும் ஒவ்வொரு சிறாரும் அடைந்திருந்தாலே இக்கல்வித்திட்டம் பயனளித்துள்ளது எனக் கொள்ளலாம். எனவே, இக் கலைத்திட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் 4 வயதுக் குழுவினருக்கு அவர்களுக்கு ஏற்ற அளவு மாத்திரம் கற்க வழி காட்டுதல் போதுமானது. எல்லாவிடயத்தையும் வரிசையாகவோ பாட வரிசையாகவோ கற்பிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

எவ்வாறாயினும் இக் கலைத்திட்டம் ஒன்றிணைக்கப்பட்ட முறையிற் சற்பிக்கப்பட்டு நிறைவாக்கப்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

இக்கலைத்திட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் தன்னை நிறைய ஆயத்தப்படுத்தவேண்டும். வெறும் வகுப்பறைக் கற்பித்தல் முறையைப் பின்பற்றலாகாது. எண்ணையும் எழுத்தையும் சில பாடல்களையும் கற்பிப்பது இவரின் வேலையல்ல.

முன்பள்ளிக் கல்விக் கலைத்திட்டத்தைக் கற்பிப்பதிற் பயிற்சியும், திறமையும், விருப்பும் உடையவரையே இங்கு ஆசிரியராகக் கொள்ள வேண்டும். சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு இது சட்டாயமாகும்.

131556

# 6. முன்பள்ளிக் கலைத்திட்டமும் ஆண்டு 1 கலைத்திட்டமும்

ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டிலிறுதியில் மாணவர் பின்வரும் குறிக்கோள்களை அடைந்திருப்பர் என்பதே ஆசிரியர் குறிக்கோளாகும்.

## முன்பள்ளிக் கலைத்திட்டம்

0.1

மொழித்திறன் செயற்பாடுகள்

பிரதானகுறிக்கோள்

கேட்டல் மூலம் பல்வேறு ஒலிகளை இனங்கண்டு ஒலிப்பனவற்றையும், அவற்றின் உணர்வுகளையும் விளங்கி அவற்றிற்கு ஏற்றபடி நடக்கக்கூடியவர் ஆக்கலும், இரசிக்கக் கூடியவராக்கலும்.

### 1.1 கேட்டல்

*1. 1. 1.*

வீட்டுச் சூழலில் ஒலிப்பனவற்றை இனங்காணுவர் (தாய், தந்தை, சுற்றம், வீட்டு மிருகங்கள், பறவைகள், ஊர்வன, மணியோசை, வாகனங்கள் போன்றன.)

*1. 1. 2*

சிறப்பான சந்தர்ப்பங்களில் ஒலிப்பனவற்றை இனங்காணக் கூடியவராவர் (திரு

## ஆண்டு 1 கலைத்திட்டம்

*1.1*

பாடசாலைச் சூழலில் எழும் பல்வேறு ஒலிகளைக் கேட்டல்

*1.2*

காதினாலேயே ஒலிகளைக் கேட்கிறோம். என்பதை அறிவார்.

*1.3*

கேட்கும் ஒலிகளை வெவ்வேறு அடிப்படையில் வகைப்படுத்துவர்.

மண வைபவம், மரண நிகழ்வுகள், ஆலய விழாக்கள், அழுகுரல், மேளம், நாதசுரம், தாளம், போன்றவை)

1: 1. 3
அண்மை ஒலிகளைக் கேட்டு ஒலிப்பவற்றை இனங்காணக் கூடியவராவர் (தாய், தந்தை, உற்றார், உறவினர், மிருகங்கள், பறவைகள், வாகனங்கள், மணியோசை போன்றவற்றைக் கேட்டு ஒலிப்பது எதுவெனக் கண்டு கூறக்கூடியவராவர்)

1.4
ஒலிகளை வெவ்வேறு முறைகளில் ஒலிக்கச் செய்ய முடியும் என்பதை அறிந்து கூறுவர்.

1.5
ஒலிவரும் திசையினை இனங்காணும் திறனைப் பெற்று வெளியிடுவர்.

1 6
வெவ்வேறு இடங்களிற் கேட்கும் ஒலிகளுள் கூடுதலாகக் கேட்பவற்றையும் உரத்த ஒலிகளையும் இனங்கண்டு கூறுவர்.

1.7
நிலத்தில் விழும் பொருட்களின் ஒலிகளைக் கேட்டு வேறுபடுத்தி அறிவர்.

1.8
பொருட்களை ஒன்றுடன் ஒன்று தட்டும் போது எழும் ஒலியைக்கேட்டு இனங் காண்பர்.

1.9
பல்வேறு ஒலிகளைக் கேட்டு வேறுபடுத்துவர்.

1.10
மாணவர் பார்த்தும் கேட்டும் பொருட்களை அறிவர்.

1:1.4
நாளாந்த வாழ்வில் கேட்கும் ஒலிகளை ஒலிக்கக் கூடியவராவர் (சேவல் கூவுதல், நாய் குரைத்தல், காகம் கரைதல், குருவி கத்தல், பசுமாடு கத்துதல்)

1.1.5
வாகன ஒலிகளை இனங்கண்டு ஒலிக்கக்கூடியவராவர் (சைக்கிள் மணி, கார், ட்ராக்டர் வான், விமானம், வண்டில்.)

1 1.6
மனிதக் குரலோசையின் தன்மைகளைக் கேட்கக் கூடியவராவர். (அழுதல், சிரித்தல், கோபித்தல், சிணுங்குதல், இரத்தல்)

1.1.7
மனிதக் குரலோசையின் குறிப்புகளை விளங்கிக் கொள்வர்.

2.
ஆசிரியர், மாணவர் கூறும் சொற்களைச் செவிமடுப்பர்.

2.1
வாக்கியங்களிலுள்ள வேறுபட்ட சொற்களைக் கேட்பர்.

2 2
சொற்களைச் செவிமடுக்கும் பழக்கத்தைப் பெறுவர்.

2.3
வாக்கியத்திலுள்ள சொற்களைக் கேட்டறிவர்.

03.
ஆசிரியர், சகமாணவர் கூறுவதைக் கேட்டுத் துலங்குவர்.

04.
தாளத்திற்கேற்ற சொற்களைக் கேட்டறிவர்.

05.
விடுகதைகளைக் கேட்கக்கூடியவராக்கல்.

06.
பாடலைக் கேட்டுச் சுவைப்பர்.

07.
பொருள்களின் உள்ளெழும் ஒலிகளைக் கேட்பர். கிலுகிலுப்பை, விதைகள்...

08.
பூர்த்தி செய்து பேசுதலைக் கேட்டுப் பூர்த்தி செய்து பேசுவர்.

1.1.8
மிருகங்களின் குரலோலியைக் கேட்டு, அதன் உணர்வுகளை விளங்கக் கூடியவராவர்.

1.1.09
ஒலிப்பன/ஒலிப்பவர்கள் பற்றிய புதிய சொற்களைக் கேட்கவும், உச்சரிக்கவும் கூடியவராவர். (அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, ஆடு, மாடு, காகம், மணி, சேவல், அருகில் இருப்பவர் பெயர், ஆசிரியர், பஸ், கார் சைக்கிள்)

1.1.10
பாடலைக் கேட்டுச் சுவைக்கக் கூடியவராவர்.

1.1.11
பாடலைக் கேட்டுப் பாடக் கூடியவராவர்.

1.1.12
கேட்கும் பாடலுக்கமைய தாளமிடக் கூடியவராவர்.

1.1.13
கட்டளைக்குத் துலங்குவராக்கல். (அமைதியாக லிரு எழுந்து நில், ஓடிவா, நிலத்தில் இரு .. போன்றன)

09.
கட்டளைக்குத் துலங்குவர்.

10.
செய்தி தெரிவிப்பார்.

11.
ஒவ்வொருவருக்கும் செய்தி கூறுவர் (சக மாணவர், ஆசிரியர், அதிபர், பெற்றார்)

12.
புதிர்களைக் கேட்டு, அதற்கேற்ப விடையளிப்பர்.

13.
செய்திகளைக் கேட்டு நயப்பர்.

14.
ஆசிரியரின் கதைகேட்டு நயப்பர்.

15.
மாணவர்களின் பாடலைக் கேட்டு நயப்பர்.

16.
கேட்டவற்றைக் கிரகித்துக் கூறுவர்.

17.
கேட்டல் மூலம் மாணவர் தம் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வர்.

1 1.14
கதை கேட்டு நயக்கக்கூடியவராவர்.

1.1.15
செய்தி தெரிவிக்கக்கூடியவராவர். (ஆசிரியர் வரட்டுமாம், நாளைக்குப் பள்ளி இல்லையாம், பூக்கள் கொண்டுவரட்டுமாம், பால் குடிக்கட்டுமாம் போன்றன)

1.1.16
கேட்டலினாற் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வர். அவர், இவர், காலை, மதியம், மாலை, வணக்கம், நன்றி, சுத்தம், பல் துலக்கு, குளி, வணங்கு, கூட்டு போன்றன)

## 02. பார்வைப் பிரித்தறிகை

2.01
ஒருவகைப் பட்டனவற்றை வகைப்படுத்துவர்.

2.02
மூன்று உண்மைப் பொருட்கள் உள்ள தொகுதியில் வித்தியாசமானதை இனங்காண்பர். (மலர்கள்-இலை, மேசைகள் - கதிரை)

2.03
கீறப்பட்ட மூன்று பொருட்களின் உருவங்களிலிருந்து வித்தியாசமான உருவத்தை இனங்காண்பர்.

## 02. பார்வைப் பிரித்தறிகை

2.01
பொருத்தமானவற்றை இனங்காண்பர்.

2 02
மூன்று / நான்கு உண்மைப் பொருட்கள் உள்ள தொகுதியில் வித்தியாசமான பொருளை இனங்காண்பர்.

2.03
மூன்று பொருட்களின் உருவங்கள் உள்ள தொகுதியில் வித்தியாசமான உருவை இனங்காண்பர்.

2.04

ஒருவகைப் பொருட்தொகுதியில் குறைபாடுடன் இருக்கும் பொருளை இனங்காண்பர். (மேசை, கதிரை, படம்)

2.05

ஒரே வகையான பொருட் தொகுதியில் குறைவுள்ள உருவை இனங்காண்பர் நாய்வால்...

2.06

கரும்பலகையில் உள்ள பட உருவங்களுடன் சிறார் தம் கையிலுள்ள உருவங்களை ஒற்றுமை காண்பர்.
(அடிமட்டம், தடி, பந்து, பென்சில்)

2.07

ஒரேவகையான பொருட் தொகுதியில் மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட பொருளை இனங்காண்பர். (இலைகளுக்குள் மலர், ஆண்களுள் பெண், தண்ணீர் போத்தல்களுக்கு இடையில் புத்தகப்பை)

2.08

ஒரேவகையான பொருட்களின் தொகுதியில் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ள ஏதாவது உருவத்தை இனங்காண்பர். (மலர்கள், நாய்கள், கோழிகள், பூனைகள் ..)

2.04

ஒரே வகைப் பொருட்தொகுதியில் குறைபாட்டுடன் இருக்கும் பொருளை இனங்காண்பர்.

2.05

ஒரேவகையான பொருட் தொகுதிப் படத்தில் குறைபாட்டுடன் இருக்கும் பொருளை இனங்காண்பர்.

2.06

கரும்பலகையிலுள்ள பட உருவங்களுடன் மாணவர் தம் கையிலுள்ள பொருள்களை ஒற்றுமை. வேற்றுமை காண்பர்.

2.07

ஒரேவகையான மூன்று பொருட்களைக் கொண்ட தொகுதியில் மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட பொருளை இனங்காண்பர்.

2.08

ஒத்த பொருட்களில் சிறிய, பெரிய பொருளை இனங்காண்பர்.

**2.09**
ஒத்த பொருட்களுள் சிறிய, பெரிய பொருளை இனங்காண்பர். (தடிகள், வாழைப்பழம், பென்சில், இலை, பாண்துண்டு, வெண்கட்டி, நாடா...)

**2.10**
சிறப்பட்ட / உண்மையான ஒத்த உருவங்களில் சிறிய பெரிய உருவத்தை இனங்காண்பர். (வட்டம், கோடு, முட்டை, பென்சில்)

## 0-3 அமைவு

**3.01**
பக்கம் மாறியிக்கும் சிறாரை இனங் காண்பர். (இடது, வலது, மேல்)

**3.02**
மாணவர் / பொருள்களின் நிலைகள், அமைவிடம்பற்றிக் கூறுவர். (அங்கு, இங்கு, மேலே, கீழே, அருகில், தூர,)

**2.09**
ஒத்த உருவங்களில் சிறிய பெரிய உருவங்களை இனங்காண்பர்.

**2.10**
பூரணமான உருவங்களை இனங்காண்பர்.

**2.11**
பூரணமற்ற உருவங்களை இனங்காண்பர்.

**2.12**
பூரணமற்ற இருவேறு உருவங்களை இனங்காண்பர்.

**1.13**
ஒத்த இருவேறு காட்சிப்படங்களில் வேறுபாடுகள் மூன்றை இனங்காண்பர்.

## 0-3 அமைவு

**3.01**
பக்கம் மாறியிருக்கும் பொருட்களை இனங்காண்பர்.

**3.02**
உருவத் தொகுதியில் பக்கம் மாறி இருக்கும் பொருட்களை இனங்காண்பர்.

3.03
எழுத்துறுப்புகள் சிலவற்றை இனங்காணக் கூடியவராகல் (—— கிடைக்கோடு, | நிலைக் குத்துக்கோடு, / / சரிவுக்கோடு, O வட்டம்,( ) ‿ வில்,)

## 04. பொருத்துதல்

4.01
சமமான பொருட்களைத் தெரிந்து பொருத்துவர். (புத்தகம், பை, செருப்பு, கால்)

4.02
பொருளொன்றின் பகுதிகளைப் பொருத்துவர். (போத்தல் - மூடி, பெட்டி- மூடி)

3.03
பொருட் தொகுதியின் நிலை/ அமைவில் வேறுபட்ட பொருளை அறிவர்.

3.04
உருவத் தொகுதியில் நிலை/ அமைவில் வேறுபட்ட உருவை இனங்காண்பர்.

3.05
பொருட்தொகுதி ஒன்றில் திசை மாறி வைக்கப்பட்டுள்ள பொருளை இனங்காண்பர்.

3.06
உருவத் தொகுதியொன்றில் வேறு திசைக்கு வைக்கப் பட்ட உருவத்தை இனங் காண்பர்.

3.07
இலகுவான சில எழுத்துகளில் வடிவை இனங்காண்பர்.

## 04. பொருத்துதல்

4 01
சமமான பொருட்களைத் தெரிந்து பொருத்துவர்.

4.02
பல்வேறு வடிவங்களில் உள்ள இரு தொகுதிகளில் உள்ளவற்றைப் பொருத்துவர்.

4.03
ஒவ்வொரு உருவிலும் உள்ள குறைகளைக் காண்பர்.

4.04
உருவத் தொகுதியில் உள்ள உருவங்களை வெவ்வேறாக இனங்காண்பர் (மரங்கள், கொடிகள், புற்கள், பழங்கள், காய்கள், பூக்கள் )

## 05. உளவியக்கச் செயற்பாடு

5.01
சிறார் தமது தொடுகை உறுப்புகளைப் பயன்படுத்தி உள இயக்கத்தை வெளிப்படுத்துவர் (கைகள், கால்கள், கண்கள், காதுகள், மூக்கு, வாய் போன்றவற்றைப் பயன்படுத்தி சில செயற்பாடுகளில் ஈடுபடுவர்) (ஓடுதல், வீசுதல், நின்ற நிலையில் துள்ளுதல், கைதட்டுதல், வணங்குதல் கேட்டல், முகர்தல், பாடுதல்)

4.03
வேறுபட்ட பொருள்களின் தொடர்பை இனங்கண்டு பொருத்துவர்.

4.04
பொருளொன்றின் பகுதிகளைப் பொருத்துதல், இரு பகுதிகளையும் இணைத்து உருவைக் காணலும், பகுதிகளைப் பொருத்துதலும்.

4.05
ஒவ்வொரு உருவிலும் உள்ள குறைகளைக் காண்பர்.

4.06
உருவத் தொகுதியில் உள்ள உருவங்களை வெவ்வேறாக இனங்காண்பர்.

4.07
சிக்கலாக வரையப்பட்ட கோடுகளை வேறுவேறாக இனங்காண்பர்.

## 02. உளவியக்கச் செயற்பாடு

5.01
தொடுகை உறுப்புகளைப் பயன்படுத்தி உள இயக்கத் திறனை வெளிக்காட்டுவர்.

5.02

நுணுக்கமான இயக்கத்திறனை வெளிப்படுத்துவர் (வட்டமாக ஓடுவர், பழம் பொறுக்குவர், மலர் பறிப்பர், வகுப்பறையைச் சுத்தம் செய்வர், மாலைகோர்ப்பர்)

5.02

நுணுக்கமான இயக்கங்களை விருத்தி செய்தல் மூலம் கண்கள், கைகளுக்கிடையில் இசைவாக்கத்தை ஏற்படுத்தல்

5.03

பிரதி பண்ணல் மூலம் கண்ணுக்கும் கைக்கு முள்ள இசை வாக்கதை வெளிக்காட்டுவர். (அசையும் பொருட்களைப் பார்த்தல், கையிலுள்ள பொருளை அசைக்கப் பார்த்தல், தன்னை நோக்கிவரும் பந்தைப் பிடித்தல், ஓடுபவரை நோக்கி எறிதல்.

5.03

நுணுக்கமான இயக்கத்திறனை வெளிக்காட்டுவர்.

5.04

பின்பற்றிச் செல்வர் (ஆசிரியர் நேராக ஓடிச்செல்ல, சிறாரும் நேரான பாதையில் ஓடுவர். ஆசிரியர் மரத்தைச் சுற்றி ஓடச் சிறாரும் பின்பற்றுவர். (வளைபாதை/கோடு)

5.04

பிரதி பண்ணுதல் மூலம் கண்ணுக்கும் கைகளுக்குமிடையிலான இசைவாக்கத்தை வெளிக்காட்டுவர்.

5.05

சமாந்தரமெனும் எண்ணக்கருவைப் பெறுவர். சிறார் சமாந்தரமாகவும், நேராகவும், வளைவாகவும் ஓடுதல், சமாந்தர வரிசைகளை அமைப்பர்.

5.05

இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக, மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக கையிலுள்ள பொருளின் அசைவுக்கு அமைய கண்பார்வையைச் செலுத்துவர்.

5.06
கிட்ட, தூர எனும் விளக்கத்துக்கான எண்ணக் கருவைக்கொள்வர். (கல் எறிதல், பந்தெறிதல், சிறார் விலகி நிற்கும் இடங்களை இனங் காணுதல்).

5.07
மேலே, கீழே, எனும் விளக்கத்துக்கான எண்ணக்கருக் கொள்வர். (பந்தெறிதல், மாங்காய் இருக்குமிடம், பறவைகள் பறத்தல், போன்ற உதாரணங்களுடன் செயற்பட்டுத் தொடர்புபடுவர்.

5.08
உயரம், தாழ்வு எனும் விளக்கத்துக்கான எண்ணக்கருக் கொள்வர். (சிறார், உயரவரிசையில் நிற்றல், ஒழுங்குபடுத்தல், கையை உயர்த்து, கையைத் தாழ்த்து)

5.09
கிடை, நிலை, சரிவு எனும் விளக்கத்துக்கான எண்ணக் கருக்கொள்ளர். (மாணவர் நிற்றல், கிடையாகப் படுத்திருத்தல், சரிவாகப் படுத்திருத்தல் இவற்றுக்கான தொடர்புகளை இனங்காண்பர்.


5.10
கிடைக்கோடு, நிலைக்குத்துக்கோடு, சரிவுக்கோடு இவற்றுக்கான எண்ணக் கருக் கொள்வதோடு வரைவர் / அமைப்பர் இனங் காண்பர்.

05.
கிடைக்கோடுகளைத்தொடர்பு படுத்துவதன் மூலம் நுணுக்கமான இயக்க விருத்தியை வெளிக்காட்டுவர்.

06:
கோணங்களை வரைவதன் மூலம் நுணுக்கமான இயக்க விருத்தியைக் காட்டுவர்.

5.11
நேர்கோடு, வளைகோடு இவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளங்குவர்.

5.12
சமாந்தர நேர்கோடு, சமாந்தர வளைகோடு, இவற்றை இனங்காண்பர், கீறுவர், உருவங்களை அமைப்பர்.



06. பேச்சு மூல வெளிப்பாடு

6.01
சேர்ந்து பாடிப் பழகுவர்.

6.02
சிறார் சுயமாகத் தகவல்களைவெளியிடுவர். (பெயர் கூறுவர். உணவு கூறுவர்...)

6.03
பின்பற்றிப் பேசுவர் (வணக்கம், நன்றி, ஆம், )

06. பேச்சு மூல வெளிப்பாடு

6.01
சேர்ந்து பாடிப்பழகுவர்

6.02
மாணவர் சுயமாகத் தகவல்களை வெளியிடுவர்.

6.03
பின்பற்றிப் பேசுவர்.

131556

6 04
சுயாதீனமாகத் தன்னை ஒரு பாத்திரமாக்கி ஒலித்துக் குரலை வெளிப்படுத்துவர் (காகா, மியாமியா, வள்ளள்..) உறவினர், பறவைகள், மிருகங்கள் போன்று.

6.05
ஆராய்வுடன் சில செயற்பாடுகளை வெளியிடுவர். (ஓடுகிறார், ஆடுகிறார், இருக்கிறார், ஏறுகிறது. இறங்குகின்றார், நிமிர், இட, எழு, மூடு...)

6.06
கட்டளைகளைக் கேட்டு மீள ஒலிப்பர். பேசுதல், சப்தமிடல், தானே மற்றவருக்குக் கூறுவர்.

6.07
கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்துவர், பயனுறுவாறாகத் தொடர்பு கொள்வர். (வணக்கம், சம்பவம், கூறுவர், கதை கேட்டு மீளக் கூறுவர், கருத்துப்பரிமாறிவிளையாடுவர், கருத்தைக் கேட்டுக் காரியத்தில் ஈடுபடுவர். (ஓடு, அங்கு போ, இங்கு வா, விரைவாக ஓடு)

6.08
பணிவுடன் பேசுவர், நன்றி, வணக்கம், போய்வருகிறேன், வாருங்கள், இருங்கள்,

6.04
கற்பனை ஆற்றலையும், ஆக்குந்திறனையும் உள்ளடக்கித் தமது ஆளுமையை விருத்தி செய்துகொள்வர்.

6 05
சுயாதீனமாகத் தன்னை ஒரு பாத்திரமாக்கிப் பேசி நடிக்கும் ஆற்றலை வளர்ப்பர். உடனடி சொற்பிரயோகத்தினால் மகிழ்ச்சியடைவர்.

6.06
ஆராய்வுடன் தகவல்களைத் தொகுத்து கூறுவர்.

6 07
சுமுகமான கலந்துரையாடலில் மாணவர் ஈடுபடுவர். மற்றையவர்களை விளங்கி ஒத்துழைப்பர்.

6 08
கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்துவர், பயனுள்ளவாறு தொடர்புகொள்வர்.

6.09
நிகழ்ச்சி பற்றிக் கூறுவர்.

6.10
தனிப்பாட்டுகள் பாடுவர்.

6,11
ஞாபகப்படுத்திப் பேசுவர்,

6.12
கலந்துரையாடுவர்.

## 07. வாசிப்பில் ஆர்வம் காட்டுவர்

7.01
படங்களை வாசிப்பர்: (பழங்கள், மிருகங்கள், பறவைகள், வாகனங்கள், காட்சிகள், ஊர்வன மனித உருவங்கள்...)

7.02
குறியீடுகளை வாசிப்பர் (சின்னங்கள், செஞ்சிலுவை, பாதைக்குறிகள் போன்றன.)

6.09
விளக்கமளிப்பர்.

6.10
கதைகள் கூறுவர்.

6.11
கூறப்படும் விளக்கத்துக்கு ஏற்ற பெயர்களைக் கூறுவர்.

6 12
பணிவுடன் பேசுவர்.

6.13
தனிப் பேச்சுகள் நிகழ்த்துவர்.

6.14
இலகுவான செய்திகளை எடுத்துக் கூறுவர், பாட்டுகள் பாடுவர்.

6.15
விமர்சனப் பேச்சு பேசுவர்.

## 07 வாசிப்பில் ஆர்வம் காட்டுவர்

7.01
எழுத்துக்களின் வரிவடிவங்களை இனங்கண்டறிவர்.

7.02
எழுத்துகளின் வடிவமைப்பை விளங்கிக் கொள்வர்.

L X O ┐ — | +

போன்றன;

7.03

சைகைகளை வாசிப்பர்- நில், ஆயத்தம், போ, வா, அங்கு, பெண்கள், ஆண்கள்.

7.04

கோடுகளை வாசிப்பர், நேர்கோடு, வளைகோடு, சமாந்தரக்கோடு, சரிவுக் கோடு.

7.03

எழுத்துகளின் ஒலியமைப்பை அறிவர்.

7.04

அடிக்கடி உபயோகிக்கும் எழுத்துகளை இனங்கண்டு வாசிப்பர்.

7.05

எழுத்துகளின் துணையுறுப்புகளை இனங்காண்பர்.

## வாசிக்க முற்படுதல்

7.06

ஒரு சொல்லை வாசிப்பர்'

7.07

சொற்களுக்குரிய எழுத்துக்களை மாத்திரம் அறிவர்.

7.08

சொற்களை இனங்கண்டு சிறு வாக்கியங்களை வாசிப்பர்.

7.09

தனி எழுத்துகளை வேகமாக வாசிப்பர்.

## 08 எழுத்து

### தசைநார்ப் பயிற்சி

8.01
கைப்பயிற்சி மேற்கொள்ளுவர். களிமண்ணை பிசைவதன் மூலம், விரல்களை, மணிக்கட்டை, முழங்கை மூட்டை, தோள் மூட்டை அசைத்துப் பயிற்சி செய்வர்.

8.02
கரும்பலகையில் மாணவர் வெண்கட்டியாற் கீறுவர். கைமூட்டுகளுக்குப் பயிற்சி நேர்கோடு, வளைகோடு,

7.10
சொற்களில் வரவேண்டிய எழுத்துக்களை இனங்காண்பர்.

### வாக்கியங்களை வாசித்தல்

7.11
இலகுவான வாக்கியங்களை ஆக்கி வாசிப்பர்.

7.12
பாடநூலை வாசிப்பர்.

7.13
குழந்தைகள் பத்திரிகையில் வரும் இலகுவான சொற்கள், வசனங்களை வாசிப்பர்.

7.14
துணை வாசிப்பு நூல்களை வாசிப்பர்.

## 08 எழுத்து

### தசைநார்ப் பயிற்சி

8.01
களிமண்ணைப் பிசைவர்.

விதைகள், மணிகள், கற்கள் போன்றவற்றை அடுக்கி விரும்பிய உருவங்களை ஆக்குவர்.

நிலைக் குத்துக் கோடு, கிடைக் கோடு, சரிவுக் கோடுகள், வில்லு, வட்டம் போன்றவற்றைச் சுயாதீன மாக வரைவர், நிலத்தில் வரைவர், வெண்கட்டியை முறையாகப் பிடிப்பர்.

8.03
பந்தெறிவர், முழங்கை மூட்டு, தோள் மூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவர்.

5667

8.04
கோடுகளைச் சிறியதாகவும் பெரியதாகவும் சமாந்தரமாகவும் கீறுவர். நிறச் சுண்ணக்கட்டிகள், கிறேயன் மெழுகுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வரைந்துநிறந் தீட்டி அழகு படுத்துவர்.

8.05
நேர், வளை கோடுகளில் விதைகள், மணிகள் போன்றவற்றை அடுக்குவர்.

8.06
களிமண் தட்டு, நிலம் ஆகியவற்றில் சிறு தடியால் கீறுவர்.

8.07
எண்ணிக்கைகளைக் கோடுகளில் கீறிக் காட்டுவர்.

8.03
மரக்குற்றித் துண்டுகளை அடுக்குவர்.

8.04
ஆகாயத்தில் / வெட்ட வெளியில் விரல்களை விரும்பியவாறு அசைப்பர்.

8.05
எழுத்துக்களை வாசிப்பதற்கு அவசியமான ஆரம்ப எழுத்து வளைவுகளை எழுதுவர்.

8 06
எழுத்துக்களின் வடிவங்களை இனங்காண்பர்.

8.07
எழுதுகோலைச் சரியான முறையில் பிடிப்பர்.

8.08

எழுதுகோலைச் சரியான முறையில் பிடிப்பர், கோடுகளைச் சுயாதீனமாக வரைவர்.

8.09

நேர்விளிம்பினு ஊவியுடன் வரைந்த நேர்கோட்டுடன் ஒப்பிட்டுப்பார்ப்பர்.

8.10

நேர்கோட்டை எழுதுகோலால் வரைய முயற்சிப்பர்.

— | / = ‖ \//

8.11

நேர், வளைகோடுகளால் வரையப்பட்ட சித்திரத்தை இரசிப்பர்.

8.12

நிலைக் குத்துக்கும், தொலைபேசிக் கம்பித் தூண், பனைமரம், தென்னை, கமுகமரம் போன்றனவற்றிக் கிடையிலானதொடர்பறிவர்.

8.13

துலா, மேசைப் பரப்புத் தளம், கூரைச் சரிவு. இவற்றுக்கும் இடையிலான வேறுபாட்டையுணர்வர்.

(கிடையானது, சரிவானது)

8.08

பார்த்தெழுதுவர்.

8.09

கரும்பலகையில் உள்ள வசனங்களைப் பார்த்தெழுதுவர்

8.10

பாடப் புத்தகங்களிலுள்ளவற்றைப் பார்த்தெழுதுவர்.

8.11

தாமறிந்த சொற்களை ஞாபகப்படுத்தி எழுதுவர்.

8.12

ஞாபகப்படுத்தி எழுதுவர்.



8.14
இடை, நிலைக்குத்து, சரிவுக் கோடுகளைக்கொண்டு தாம் விரும்பிய வடிவங்களை வரைவர்.



8.15
வட்டம், வில், சரிவுக்கோடு இவற்றைப்பயன்படுத்தி விரும் பிய வடிவம் வரைவர்.

## 09 கணிதம்

### 9.01 தெரிதல்

பொருள் தொகுதியொன்றை ஒரு பண்புக்கு (பருமன், வடிவு வகை, நிறம் ) ஏற்ப வேறு படுத்தும் ஆற்றலைப் பெறு வர். காய்கறி, கதிரை, மேசை...)

9.02
உயிரினங்களை வேறுபடுத்து வர். மாடு, ஆடு, பறவை...

9:03
ஒன்றுக்கொன்று ஒத்திருக்கை தொடர்பான எண்ணக்கருக் களை விருத்தி செய்தல். ஒரு தொகுதியில் உள்ள ஒத்த பொருளுடன் ஒப்பிட்டுத் தொடர்பு படுத்துவர்.

9.04
படங்களுக்கிடையிலான தொடர்பை விளங்குவர்.

## 09 கணிதம்

### 9.01 தெரிதல்

பொருட் தொகுதியொன்றை ஒரு பண்புக்கு (பருமன், வடிவு, நிறம்) ஏற்ப வேறுபடுத்தும் ஆற்றலைப் பெறுவர்.

9.02
ஒன்று ஒன்றுக்கான ஒத் திருக்கை தொடர்பான எண் ணக்கருவை விருத்திசெய்தல் (ஒரு தொகுதியில் உள் ள் பொருளுடன் மற்றத் தொகுதி யில் உள்ள ஒத்த பொருளு டன் ஒப்பிடடுத் தொடர்வு படுத்துவர்.

9.03
வெவ்வேறு தொகுதியிலுள்ள உருக்களுக்கு படங்களுக்கிடை யிலான தொடர்வை ஒப்பிட் டுப் பார்க்கும் திறன் பெறு வர்.

9 05
பொருளின் அமைவை வேறு பொருட்களுடன் ஒப்பிட்டு விளங்கிக்கொள்ளுப திறன் பெறுவர். (உண்மைப் பொருள் படங்கள் அண்மைத்தூரம்.)

## அயல்

*9.05*

பொருளின் அமைவை வேறு பொருட்களுடன் ஒப்பிட்டு விளங்கிக் கொள்ளல்.

## வரிசைப்படுத்தல்

*9.06*

நிறை, உயரம், நீளம் (பருமன்) ஆகிய பண்புள்ள பொருட்களில் ஒரு பண்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வரிசைப்படுத்தல் (உண்மைப் பொருள்கள் மாணவர், வெண்கட்டி, மண்ணுருண்டை, மாங்காய், மண்துண்டம்...)

## வடிவங்கள்

*9.07*

நியமமற்ற அலகுகளினால் அளப்பர். (கண்பார்வையால் மதித்தல், பெரிது, சிறிது, நீளமானது, கட்டையானது நீளம் குறைந்தது)

*9.05*

நிறை, உயரம், நீளம் (பருமன்) ஆகிய பண்புள்ள பொருட்களில் ஒரு பண்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வரிசைப்படுத்தல், உண்மைப் பொருள் மாணவர் வெண்கட்டி, தேங்காய், மாங்காய், மண்துடைப்பம் மேசைக்கதிரை, கேத்திர கணித உருவங்கள், திண்மப் பொருட்கள் ஆகியவற்றின்.

*9.06*

நியமமற்ற அலகுகளினால் அளப்பர். கண்பார்வையூடாக மதித்தல். பெரிது, சிறிது, நீளம் குறைவானது.

*9.07*

சமமான அளவு, நிறை, பருமனையும் இனங்காண்பர்,

## நிறை

9.08
சமமான நிறை, நிறைகூடியது நிறை குறைந்தது போன்றவற்றைப் பொருளைத் தூக்கிப் பார்த்துக் கூறுவர் - பயன்படுத்துவர்.

9.08
ரூபாய் 1, ரூபாய் 2, ரூபாய்5 ஆகிய நாணயங்களை இனங்காணும் கொடுக்கல், வாங்கல் செய்யும் திறனைப் பெறுதல்.

## களவளவு-கொள்ளளவு

9.09
கொள்ளளவு தொடர்பான விளக்கம் பெறுவர். நீர் நிரம்பிய பெரிய வாளியினுள் அதிக நீர், சிறிய வாளியினுள் குறைவான நீர் பாத்திரங்களைக் கொண்டு மனதாற் கணித்தல்.

அதிகளவுகஞ்சி/உணவு/கடலை குறைவான கஞ்சி/உணவு/கடலை கூறுவர், பயன்படுத்துவர்.

9.9
நாணயங்களூடாக எளிய கூட்டும் திறனைப் பெறுவர்.

131556

## காலம்

9.10
காலை, மாலை, மதியம், பகல், இரவு, போன்றவற்றுக்கான விளக்கம் பெறுவர். பிரயோகித்துக்கூறுவர்.

9.11
விரைவாக, ஆறுதலாக (வேகமாக, மெல்ல) போன்ற சொற்களுக்கான எண்ணக்கருக்கொள்வர்.

9 10
1, 2, 5, 10, 25, 50 சதம் ஆகிய நாணயங்களை இனங்காணுதல். கொடுக்கல் வாங்கல் செய்யும் திறன் பெறுதல்.

.11
பல்வேறு நீள அளவுகளை ஒப்பிடுவதன் மூலம் நீளம் கூட, நீளம் குறைய, நீளம் சமன் ஆகவிருக்கும், சந்தர்ப்பங்களை அறிந்துகொள்ளும் திறனைப் பெறுதல்.

## எண்ணுதல்

*9.12*
*1-10 வரையான, இலக்கங்களைக் கூறக்கூடியவராக இருப்பர் ஒன்று, இரண்டு, மூன்று எண்ணிக்கை பற்றிய எண்ணக் கருக் கொள்வர்.*

## நிறை

*9.13*
*பாரமானது, பாரம் குறைந்தது (தன்னால் தூக்கக் கூடியது. தூக்க முடியாதது, தூக்கிப்பார்த்துக்) கூறுவர்.*

*9.12*
*இரு பொருட்களை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இரு கைகளாலும் தூக்கி பார்த்து அவற்றின் நிறை கூடிய குறைந்த பொருட்களை இனங்கண்டு கூறக்கூடியவராக இருப்பர்.*

*9.13*
*எளிய தராசைப் பயன்படுத்துவதற்கான ஆரம்பத் திறனைப் பெறுதல்.*

*9.14*
*நிறை கூடிய பொருளின் தராசின் தட்டை புவி நோக்கி கவரப்படும் என்பதை விளங்கிக் கொள்ளல். (புவியீர்ப்பு)*

## 9.12கனவளவும்-

## கொள்ளளவும்

வெவ்வேறு பாத்திரங்களில் கொள்ளும் அளவுகள் தொடர்பான ஆரம்ப அறிவைப் பெறுவர்.

**9.17 காலம்**
*காலை, பகல், மாலை எனும் நாளொன்றின் அவ்வக் காலங்களில் சுற்றாடலின் பண்புகளை இனம் காணும் திறன் பெறல்.*

9.17
இரவு, நடு நிசி, அதிகாலை போன்ற நாளின் அவ்வக் காலங்களில் சுற்றாடலில் பண்புகளை இனங்காணும் திறன் பெறல்.

## 9.18 எண்ணுதல்

1-10 வரை விளக்கத்துடன் பொருளைக் கொண்டு எண்ணும் திறன் பெறுதல்.

9 19
1-20 வரை எண்ணும் திறன் பெறுதல்.

9.20
1-50 வரை எண்ணும் திறன் பெறுதல்.

9.21
1-10 வரை பொருட்களின்றி எண்ணும் திறன் பெறுதல்.

9.22
1-3 வரையுள்ள எண்களுக்குரிய எண் குறிகளையும் எண் பெயர்களையும் அறிந்து கொள்ளல், வாசித்தல், எழுதுதல் தொடர்பான திறன் பெறுதல்.

9.23
1-6 எண்கள் தொடர்பான மேற்கூறியதிறன் பெறுதல்.

9 24
1-10 எண்கள் தொடர்பான மேற்கூறிய திறன் பெறுதல்.

## 10. அழகியற் தொழிற்பாடு

### நோக்கம்

இசை ஞானமுடையவனாக்கல் சிறப்பாற்றலை வெளிப்படுத்தக் கூடியவனாக்கல், பாடசாலையை விருப்பத்திற்குரிய இடமாக மாற்றல்,

### கேட்போம் பாடுவோம்

### ஆடுவோம்

10.01
வகுப்பிலுள்ள மாணவர் ஒருவரே டொருவர் சுமுகமாகப் பழகுவர்.

### 9.25 கூட்டம்

பொருட்கள், உருவங்கள் மூலம் கூட்டுத்தொகை 3 ஆகும் வரை கூட்டும் திறன் பெறுதல்.

9 26
1-6 வரை கூட்டும் திறன் பெறுதல்.

9.27
1-10 வரை கூட்டும் திறன் பெறுதல்.

## 10. அழகியற் தொழிற்பாடு

### நோக்கம்

ஓய்வு நேரத்தைப் பொருளுள்ள விதத்திலும். பயனுள்ள விதத்திலும் செலவிடுவதோடு நல்லாய்வுத் திறன்களையும், இரசனையையும் வளர்த்துக் கொள்ளல். அழகியற் செயற்பாடுகள் மூலம் பாடசாலையை விருப்பத்திற்குரிய இடமாக மாற்றுதல்.

10.01
வகுப்பிலுள்ள மாணவன் ஒருவரோடொருவர் சமூகமாகப் பழகுவர், அறிமுகமாவர்.

10.02

மாணவர் ஒருவரோடொருவர் அறிமுகமாவர்.

மாணவர் எல்லோருடனும் கூச்சமின்றிப் பழகி தம்மிடமுள்ள இயல்பான ஆற்றலை வெளிப்படுத்துவர்.

10.03

வேறுபட்ட உயிரினங்களால் எழுப்பப்படும் ஒலிகளைக் கேட்பர், ஒலிப்பர்.

10.04

விரைவு, திசை என்பன தொடர்பான திறனைப் பெறுவர்.

## வெளியைப் பயன் படுத்துவோம்

10:06

குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வெளியைப் பயன்படுத்துவர்.

## சரீரப் பயிற்சி செய்வோம்

10.07

குறுகிய. மிகக் குறுகிய, நீண்ட, சரீரப் பயிற்சிகள் மூலம் மாணவர் இலகுவாக சுவாசிக்கும் ஆற்றலைப் பெறுவர்,

10.02

யாவருடனும் கூச்சமின்றிப் பழகி தம்மிடமுள்ள இயல்பான ஆற்றலை வெளிப்படுத்துவர் - (ஆடுதல், பாடுதல் கைவினை விளையாட்டு )

10.03

பல்வேறுபட்ட உயிரினங்களின் வெளிப்படுத்தப்படும் ஒலிகளைக் கேட்டு மீள ஒலிப்பர்.

10.04

விரைவு, திசை, இசைவு என்பன தொடர்பான திறனைப் பெறுவர்,

## வெளியைப் பயன் படுத்துவோம்

10.06

வெளியைப் பயனுள்ள முறையிலும், குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட வெளியைப் பயன்படுத்தப் பழகுவர்.

## சரீரப் பயிற்சி செய்வோம்

10.07

குறுகிய, மிகக்குறுகிய, நீண்ட. மிக நீண்ட சரீரப் பயிற்சி மூலம் மாணவர் இலகுவாகச் சுவாசிக்கும் ஆற்றலைப் பெறுவதன் மூலம் பாடல்களைத் தொடர்ச்சியாகப் பாடும் திறன் பெறுவர்.

## தாளப் பயிற்சியோடு அசைந்தாடுவோம்

**10.09**
மாணவர் தமது சுயமான அசைவைத் தாளக் கட்டுப் பாட்டுக்குள் அடக்கும் திறன் பெறுவர்.

**10.10**
குழுவாக இயங்கும் போது ஒத்திசைவைப் பேணும் ஆற்றலைப் பெறுவர்.

## ஒன்று சேர்வோம்

**10.11**
குழு நிலையில் இயங்கும் ஆற்றலைப் பெறுவர்.

**10.12**
குழு நிலையின் ஒத்திசைவு முறையைப் பழகுவர்.

**10.13**
தரையில் வரையப்பட்டுள்ள வட்டம் செவ்வகம், முக்கோணி போன்ற வடிவங்களில் இயங்குவர்.

**10.14**
கோடு, வடிவங்கள் அறிந்து கொள்வர். நேர்கோடு, வளைகோடு, வேறுபாடுகளை அறிந்து கொள்வர். நேர்கோடு, வளைகோடு வழியில் இயங்குவர்.

## 10.08 தாளப் பயிற்சியோடு அசைந்தாடுவோம்

**10.09**
மாணவர் தமது சுயமான அசைவை-தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கும் திறனைப் பெறுவர்.

**10.10**
குழுவாக இயங்கும் போது ஒத்திசைவைப் பேணும் ஆற்றலைப் பெறுவர். (பேசுதல், பாடுதல், ஆடுதல்)

## ஒன்று சேர்வோம்

**10.11**
குழு நிலையில் இயங்கும் ஆற்றலைப் பெறுவர்.

**10 12**
குழு நிலையில் ஒத்திசைவை முறையைப் பெறுவர்.

**10.13**
தரையில் வரைந்துள்ள வடிவங்களை அறிந்து அவ்வடிவங்களில் இயங்குவர் வட்டம், செவ்வகம், சதுரம், முக்கோணம் வளைகோடு, நேர்கோடு..

**10.14**
வட்டமாகுதல் அரைவட்டமாக்குதல் சமாந்தர கோடுகளில் நிற்றல் கோடொன்றில் ஒன்றாகுதல் பல வரிசைகளில பிரிதல்.

10.15
ஒழுங்கான வளைகோடு வட்டத்தை விளங்குவர், வட்டமாக இயங்குவர். மையம், பருதி தொடர்பறிவர். செவ்வகம், சதரத்தை இனங்காண்பர். தரையில் வரைவர் சேர்ந்துகொள்ளுவர்.

10.16
பாடல்களை இசையோடும் அபிநயத்தோடும் பாடுவர்.

10.17
பாடல்களின் கருத்தை அபிநயத்தின் மூலம் வெளிப்படுத்துவர்.

## இரசிப்போம்-

## இரசித்து மகிழ்வோம்

10.18
இயற்கையின் அழகான அம்சங்களை இரசிப்போடு எடுத்துக் கூறுவர்.

10.19
இயற்கையின் அழகுகளை இரசிப்பர் சித்திரம், சிற்பம் மூலம் எண்ணக்கருக்களை வெளிப்படுத்துவர்.

10.20
இசை மூலம் வெளிப்படுத்துவர்.

10.21
எண்ணக்கருத்துக்களை நடனத்தின் மூலம் வெளிப்படுத்துவர்

10.15
வகுப்பறை நடவடிக்கைகளில் இசைவாக ஒன்று சேர்ந்து நடத்தல்.

10.16
பாடல்களை இசையோடும் அபிநயத்தோடும் பாடுவர்.

10.17
பாடல்களின் கருத்தை அபிநயத்துடன் வெளிப்படுத்துதல், தனித்தும் குழுவாகவும்.

## இரசிப்போம்-

## இரசித்து மகிழ்வோம்

10.18
இயற்கையின் அழகான அம்சங்களை இரசித்து எடுத்துக் கூறுவர்.

10.19
இயற்கையின் அழகுகளை இரசிப்பர் அதனை சிற்பம், சித்திரம், இசை, நடனம் மூலம் எடுத்துக் காட்டுவர்.

10.20
ஆக்கத்திறன்களை இரசிக்கும் மனப்பாங்கைப் பெறுவர்.

10.21
தான் செய்யும் செயற்பாட்டினையும் மற்றவர் செய்யும் செயற்பாட்டினையும் இரசித்து மகிழ்வர்.

10.22
ஆக்கத்திறன்களை இரசிக்கும் மனப்பாங்கைப் பெறுவர்.

10.23
தனதும் மற்றவரினதும் செயற்பாட்டினை இரசிப்பர்.

## மெய்ப்பாட்டால் உணர்வுகளை வெளியிடுவர்

10.24
பல்வேறு உணர்வுகளை மெய்ப்பாடுகள் மூலம் வெளிப்படுத்துவர். (அழுகை, சிரிப்பு, கோபம், வெறுப்பு, இரக்கம். கருணை, பரிவு)

## நடித்துக் காட்டுவர்

10.25
பாவனை செய்யும் திறனைப் பெறுவர் (குழந்தை. அம்மா அப்பா, அக்கா, நாய், பூனை கன்று, தாரா, சேவல்)

10.26
சுயமான நடிப்புத் திறனை வெளிப்படுத்துவர்

## ஆக்கங்களில் ஈடுபடுவர்

10.27
இயல்பாக தம்மிடம் உள்ள ஆக்கத்திறனை வெளிக்கொணருவர்.

## மெய்ப்பாட்டால் உணர்வுகளை வெளியிடுவர்

10 24
பல்வேறு உணர்வுகளையும் மெய்ப்பாடுகள் மூலம் வெளிப்படுத்துவர். (அழுகை, சந்தோசம், நகைச்சுவை, கோபம், வெறுப்பு)

## நடித்துக் காட்டுவர்

10 25
பாவனை செய்யும் திறனைப் பெறுவர்.

10 26
சுயமான நடிப்புத் திறனை வெளிப்படுத்துவர்.

## ஆக்கங்களில் ஈடுபடுவர்

10 27
இயல்பாக தம்மிடம் உள்ள ஆக்கத்திறனைப் பெறுவர். றபான், சிலுசிலுப்பை தாளம், சதங்கை போன்றவற்றை ஒலிப்பர்.

10.28
பொம்மலாட்டம் ஆடுவர்.

10.29
பல்வேறு இசை வடிவங்களை இனங்காண்பர் (கும்மி? கோலாட்டம், காவடி)

10.28
பொம்மலாட்டம் நடத்துவர்.

10.29
பொம்மலாட்ட நிகழ்ச்சிகளைக் காண்பதன் மூலம் தாமும் அதில் ஈடுபட ஆர்வம் முறுவர்.

10.30
இலகுவாகஇயங்கும் பொம்மைகளை அமைத்து அவற்றை இயக்குவதன் மூலம் கருத்தை வெளிக்கொணருவர்.

10.31
பொம்மலாட்டத்தின் வகைகளை பற்றி அறிந்து கொள்வர் பலவிதமான சம்பாஷனைகளை தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவர்.

## பல்வேறு இசை வடிவங்களை இனங்காண்போம்

10.32
பல்வேறுபட்ட நேரங்களிலும் சந்தர்ப்பங்களிலும் இசைக்கப்படும் இசைகளை இனங்காண்பர். கும்மி, கோலாட்டம், காவடி, வில்லுபபாட்டு...

10 33
சிறு பாடல்களைப் பாடவும் வடிவங்களை நடிக்கவும் செய்வர்.

## 11.00
## மெய்வல்லுனர் விளையாட்டுக்களும் விளையாட்டுக்கான அடிப்படைத் திறன்களும்

*11.01*
*பாதத்தை தரையில் பதித்துச் சரியாக நடப்பதற்கான அடிப்படைத் திறன்களைப் பெறல்.*

*11.02*
*ஓடுவதற்கான அடிப்படைத் திறன்களைப் பெறுவர்.*

*11.03*
*எறிதல் தொடர்பான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்வர்.*

*சிறு காகித குருவி எறிதல், அசையாத அசையும் காகத்துக்குக் கல்லெறிதல் குறிப்பிட்ட இலக்கொன்றுக்கு சிறு குரும்பட்டி போன்றவற்றால் எறிதல்.*

*11.04*
*சிறு பந்தை கையாளல் தொடர்பான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்து கொள்வர். ரெனிஸ் பந்தை உருட்டல், எறிதல், பொறுக்குதல்.*

## 11.00
## மெய்வல்லுனர் விளையாட்டுக்களும் விளையாட்டுக்கான திறன்களும்

*11.01*
*பாதத்தைத் தரையில் பதித்துச் சரியாக நடப்பதற்கான அடிப்படைத் திறன்களைப் பெறுவர்.*

*11.02*
*ஓடுவதற்கான அடிப்படைத் திறன்களைப் பெறுவர்.*

*11.03*
*பாய்தல் திறன்களையும், நிலம் படல் திறன்களையும் விருத்தி பெறுவர்.*

*எறிதல் தொடர்பான அடிப்படைத் திறன்களைப்பெறுவர்.*

*11.04*
*பந்துகளைக் கையாளல் தொடர்பான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்வர். வளையங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகள் பற்றிய அடிப்படைத் திறன்களைப் பெறுவர்.*

அடிப்படையான மெய்நிலைகள்

11.5
முண்டத்தை நிமிர்த்திவைத்தல், இரு பாதங்களிலும் சம நிலையாக நிற்றல், தொடர்பான அடிப்படைத் திறன்களைப் பெற்றுக் கொள்வர்.

11.06
சரியாக அமர்ந்திருப்பதற்கு வேண்டிய அடிப்படைத் திறன்களைப்பெறுவர் (நிலத்தில், சார்மனை, வாங்கு)

11.07
சார்ந்திருத்தல் தொடர்பான தொழிற்பாடுகளுக்குரிய அடிப் படைத்திறன்களைப் பெறுவர். (சார்மனை, மரம், ஆட்களின் முதுகில்)

கல்வி சார்ந்த தசைப் பயிற்சிகள்

11.08
இடம் பெயர்தல், தரித்தல் ஆகியன தொடர்பான அடிப் படைத் திறன்களைப் பெறு வர். (நேராக ஓடுதல், தரித் தல், வளைந்து ஓடுதல், வட்ட மாக ஓடுதல்)

11.09
சமநிலை தொடர்பான அடிப் படை அனுபவங்களைப் பெறு வர். சமதரையில், சாய்தளத் தில், அசையும் மரத்தில்; நடப்பர்

அடிப்படையான மெய்நிலைகள்

11.05
முண்டத்தை நிமிர்த்தி வைத் திருத்தல். இரு பாதங்களின் மீதும் சம நிலையாக நிற்றல் ஆகியன தொடர்பான அடிப் படைத் திறன்களைப் பெற் றுக் கொள்வர்.

11.06
சரியாக அமர்ந்திருப்பதற்கு வேண்டிய அடிப்படைத் திறன் களைப் பெறுதல்.

11.07
சாய்ந்திருத்தல் தொடர்பான தொழிற்பாடுகளுக்குரிய அடிப் படைத் திறன்களைப் பெறு தல்.

கல்வி சார்ந்த தசைப் பயிற்சிகள்

11.08
இடம் பெயர்தல், தரித்தல், ஆகியன தொடர்பான அடிப் படைத் திறன்களைப் பெறு வர்.

11.09
சமநிலை தொடர்பான அடிப் படை அனுபவங்களைப் பெறு வர்.

11.10
உடலின் வெவ்வேறு மெய் நிலைகளின் போது உடல் நிறையைச் சமநிலையில் பேணக்கூடியவராக்கல். (குனிதல், நிமிர்தல், குந்துதல் தாரா நடை, தவழ்தல்)

11.10
உடலின் வெவ்வேறு மெய் நிலைகளின் போது உடலின் ஒரு பகுதியில் இருந்து மறு பகுதிக்கு தமது உடலின் நிலை மாறும் விதம் தொடர்பான பயிற்சியைப் பெறுவர்.
உடலின் வெவ்வேறு பகுதிகள் மூலம் உடல் நிலையைத் தாங்கும் திறன்களைப் பெறுவர்.

## அசைவு தேடி ஆய்தலும் - மாதிரியாகச் செய்து காட்டலும்

## அசைவு தேடி ஆய்தலும் போலச் செய்தலும் மாதிரியாகச் செய்தல் / அபிநயம்

11.11
ஆகிதாளத்துக்கமைய அசைவர்.

11.11

11.12
அசைவுகளில் பரிச்சயம் பெறுவர். உடற்தயார் நிலைப் பயிற்சிகள், (பிரதான மூட்டுகள், தலை, தோள், இடுப்பு, முழங்கால்)

11.12
அசைவுகளில் பரிச்சயம் பெறுவர்.

11.13
வெளியைப் பயன்படுத்தும் திறன்களைப் பெறுவர். (ஓடுதல், ஆடுதல், உரத்துக் கூறுதல், தாளத்திற்கு அசைதல்)

11.13
வெளியைப் பயன்படுத்தும் திறன்களைப் பெறுவர்.

11.14
சூழலிலிருந்து வரும் பல்வேறுபட்ட ஒலிகளைக் கேட்பர். (சைக்கிள் ஒலி, நாய் குரைத்தல், கார் ஒலி, மோட்டார், சைக்கிள் ஒலி, காகம் கரைதல் போன்றன) ஒலிகளுக்கு

ஏற்ப தம்மை இசைவு படுத்துவர்.

11.15

புத்தளிப்புக் கருவிகளால் எழுதப்படும் ஓசைகளைக் கேட்பர். இசைப்பர்.

11.16

அபிநயம் செய்து காட்டுவர். காகம் பறத்தல், மேளம் அடித்தல், வயலின் வாசித்தல், நாதசுரம் வாசித்தல், ஐயர் மணியடித்தல், அருவி வெட்டுதல் போன்றன.

11.17

நரம்பு - தசை இசைவாக்கத்தினைப் பெறுவர். (நீர் ஊற்றல், கூட்டுதல், கோடுகள் கீறுதல், படம் கீறல், படிகளில் ஏறுதல், இறங்குதல், சமநிலை மரம் ஏறுதல், ஏணி ஏறுதல்)

11.14

சூழலில் ஏற்படும் பல்வேறுபட்ட வாகனங்களின் ஒலியைக் கேட்டு வேறுபடுத்துவர்.

11 15

புத்தளிப்புக் கருவிகளினால் எழுப்பப்படும் ஓசைகளைக் கேட்பர்

11.16

போலச் செய்வதில் பரீச்சயம் பெறுவர்.

11 17

நரம்புத் தசை இயைபாக்கத் திறன்களைப் பெறுவர்,

# முன்பள்ளிக் கல்வி

## 12. நல்லொழுக்கம்

*12.01*

சமூக இசைவாக்கம் பெற்று வாழ்வதற்கான நல்லொழுக்க முடையவராவர்; சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களை மதிக்கவும் சுயஒழுக்கம் உடையவராகவும் விளங்குவதற்காதாரமான பண்புகளை விருத்திசெய்வர்.

*12.02*

நாளாந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களை வீட்டிலும் வெளியிடங்களிலும் பின்பற்றுவர் (உடல், வசிப்பிடம், ஆடை அணிகளில் புறச் சுத்தம் பேணுவர்)

*12.02*

தமது நாளாந்த போசனை உணவுகளை விரும்பியும், நேரத்திற்கும் உண்ணுவர் - உணவு உண்ணும் முறையைக் கடைப்பிடிப்பர்.

*12.03*

தமது சொந்த ஆடை அணிகளை அணியவும், சுத்தமாகப் பேணவும் பழகுவர்.

*12.04*

தனது - பாடசாலை உபகரணங்களைச் சரியாகத் தெரிவு செய்து பாடசாலைக்கு எடுத்துச் செல்லவும், பாதுகாக்கவும். பயன்படுத்தவும், எடுத்துவரவும் கூடியவர் ஆவார்.

*12 05*

பெற்றோரின் அனுமதியுடன் வீட்டை விட்டு வெளியேறும் பழக்கங்களைப் பெறுவர்.

*12.6*

வீதி ஒழுங்குகளைப் பின்பற்றி தனக்கும் ஏனையவர்களுக்கும் பாதுகாப்பாக நடந்து கொள்வர்.

12.07

வீதியால் செல்லும் ஏனையவர்களில் இருந்தும் ஏனையவற்றில் இருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர் ஆவார்.

12.08

பள்ளிநண்பர்கள், சகோதரர்கள் ஆகியோருடன் அன்பாகவும் சகோதரத்துவத்துடனும் பழகக் கூடியவராவர். (வணக்கம் கூறுவர். நன்றி செலுத்துவர். அன்பு காட்டுவர்)

12.09

பெற்றோர், ஆசிரியர், மூத்தோர், ஏனையோருடன் அன்புடனும், பணிவுடனும், மரியாதையுடனும், சுயகட்டுப்பாட்டுடனும் பழகக் கூடியவராவர்.

12.10

ஆசிரியர், அதிபர், மூத்தோர் கட்டளைகளை விளங்கி ஒழுகுவர்.

12.11

பள்ளிச் சொத்துக்கள், ஏனையவர்களின் சொத்துக்களைப் பாதுகாக்கும், பேணும் பழக்கம் பெறுவர்.

12.12

வழிபாட்டிற்கு உரியவர்களை மதிக்கவும், அஞ்சலிக்கவும் தெரிந்தவராதல்.

12.13

பொதுச் சொத்துக்களையும், மற்றவர்களின் சொத்துக்களையும் மற்றவர்களுடன் பங்கிட்டும் விட்டுக்கொடுத்தும் பயன்படுத்தும் பழக்கம் பெறுவர்.

12.14

பள்ளி ஒழுங்கு விதிகளை பின்பற்றவும் அவற்றிக்கு மதிப்பளிக்கவும் பழகுவர்.

12.15

உடற்பயிற்சி, இசை, நாடகம் போன்ற பல்வேறு செயற்பாடுகளிலும் விருப்புடன் பங்குபற்றுவர்.

12.16

உண்மை, நேர்மை, முயற்சி, அன்பு, சுறுசுறுப்பு, பணிவு போன்ற பண்புகளை உடையவராவர்.

12.17

தனித்தும், குழுவினராகவும் சேர்ந்து ஒற்றுமையுடன் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடியவராவர்.

12.18

வீடு, பள்ளிக்கூடம், நாடு போன்றவற்றிக்கு தாம் ஆற்ற வேண்டிய கடமைகளைத் தெரிந்து செய்யக் கூடியவராவர்.

12 19

தனது நாடு, மொழி, இனம், கலை, பண்பாடு, வளம் போன்றவற்றில் விருப்பும், பின்பற்றும், பாதுகாக்கும் எண்ணம் செயற்பாடு உடையவராவர். தனது மொழி நாடு வளங்கள் பற்றிய பாடல்களைப் பாடி ஆடி மகிழ்வர்.

## 13 தேச சமூக பண்பு வளர்ச்சி

13.01

தனது தேசம், மொழி, கலை, வளம், பண்பாடுகளைத் தெரிந்தவராகவும். அவற்றைப் பேணவும், பின்பற்றவும், பாதுகாக்கவும் கூடியவராதல்.

13.02

தேசம் என்னும் கட்டமைப்பில் அடங்குவனவற்றையும், அவற்றின் பயன்பாடுகளையும் தெரிந்தவராதல்.

13.03

தனது ஆற்றலைச் சூழலினதும் சமூகத்தினதும் நன்மைக்காகவும், பயன்படுத்தும் விருபபுப் பெறுவர். ஏனையவர்களுடன் அன்பு, பண்பாகப் பேசவும் பழகுவர்.

13 04

சூழலை அறிவியல் ரீதியில் அணுகித் தமது தேவைக்குப் பயன்படுத்தக் கூடியவராதல்.

13.05

தேசத்திற்காக உழைக்கும் உணர்வு உடையவராவர். தேசத்தின் புகழ் பாடக் கூடியவராவர்.

13.06

தேச, சமூகப் பண்பாடுகள் பற்றிப்பாடவும், ஆடவும் கூடியவராவர்.

## 14 செயற்றிறன் வளர்ச்சி ஆக்க முயற்சி

14.01

நாளாந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவர்.

14.02

பள்ளிக்கூடம், வீடு, சூழலைச் சுத்தமாகப் பேணுவர்.

14.03

பள்ளிக்கூட வீட்டுத் தளபாடங்களையும், ஏனைய தள பாடங்களையும் முறையாகப் பேணுவர்.

14.04

தனது ஆடை அணிகலன்களை முறையாகப் பயன்படுத் தவும், சுத்தமாகப் பேணவும் கூடியவராவர்.

14.05

பள்ளிக்கூட ஒழுங்குகளை வழிபாடுகளைப் பின்பற்றுவர்.

14-06

ஐம்புலன்களையும் சரியாகப் பயன்படுத்தவும், உளத்தேவை களுடன் இயைபாக்கத்துடன் செயற்படவும் கூடியவராவர்.

14-07

சித்திரங்களைக் கீறுவர், எழுத்துறுப்புக்களை சுயாதீனமாக வரையக் கூடியவராவர்.

14-08

வழிகாட்டியினுதவியுடன் சில படங்களை வரையக் கூடியவ ராவர்.

14-09

மாலை கட்டுதல், மேசையை அலங்கரித்தல், வகுப்பறையை ஒழுங்குபடுத்துதல், அழகாகப் பாடசாலைச் சுற்றாடலைப் பேணி, மரக்கறி நாட்டிப் பராமரிக்கக் கூடியவராதல்.

14-10

சூழலில் வாழும் பறவைகள், மிருகங்கள், ஊர்வன போன்ற வற்றை நேசிப்பர், பயன்படுத்துவர் அவற்றுடன் அவதானத் துடன் இசைவுபடுவர்.

14-11

பாடசாலை விழாக்களைக் கொண்டாடக் கூடியவராவர்.

14-12

வீட்டு வேலைகளைச் செய்யக் கூடியவராவர்

14-13

பயனுள்ள பொழுது போக்குகளை மேற்கொள்ளக் கூடியவ ராவர்.

14-14
அழகுப் பொருட்களை ஆக்கக் கூடியவராவர்.

14-15
கண்காட்சி, இசை நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சி, (நடனம் நாடகம்) போன்ற நிகழ்வுகளில் பங்கேற்பர்.

14-16
நீதிக்கதைகள் சொல்வர்.

14-17
சமூக சேவைகளில் ஈடுபாடு கொள்வர்.

14-18
தமது சொந்தப் பண்டிகைகளைக் கொண்டாடக் கூடியவராவர்.

14-19
விளையாட்டுப் போட்டிகள், உடற்பயிற்சிகள் போன்றவற்றில் ஈடுபடுவர்.

14-20
பயனுள்ள ஆக்க முயற்சிகளில் ஈடுபடுவர்.

14-21
சூழலில் உள்ள தாவரங்கள், நீர் நிலைகள், நில அமைப்பு இவற்றின் தன்மைகளை விளங்கி இசைவுபடுவர்.

# கலைத்திட்டமும் - வேலைத்திட்டமும்

முன்பள்ளிக் கலைத்திட்டத்தில் எழுதப்பட்டுள்ள குறிக்கோளகளை மாணவர் அடையத்தக்கதாக வழி நடத்துவதே ஆசிரியரின் பணியாகும். குறிக்கோள்களை மாணவர் அடையச் செய்ய அவர்களைச் சில செயற்றிட்டங்களில் ஈடுபடுத்த வேண்டி இருக்கும். செயற்பாடுகளில் மாணவர் ஈடுபடும் போது பெறும் அனுபவங்களே சிறாருக்கான கல்வி ஆகின்றது. அனுபவங்கள் மூலம் பெறும் கல்வி இலகுவாக மறந்து விடக் கூடியது அல்ல, ''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' எனுமாப்போல் இவ் அனுபவங்களை எதிர்கால வாழ்விற்கு ஏற்ப விருத்தி செய்யப்படும் போது வாழ்க்கைக் கல்வி ஆகின்றது. கல்வி வாழ்க்கைக்காகிறது, எனவே முன்பள்ளிக் கல்வி வெறும் அறிமுறையான கல்வி ஆக

அமைதல் ஆகாது. மாணவர் தாம் கற்கின்றோம் எனும் உணர்வுப் பெறாமலே கல்விக்கான ஏற்பாடுகளைச் செய்வதிலேயே ஆசிரியரின் கெட்டித்தனம் தங்கியுள்ளது. எனவே ஆசிரியர் கலைத்திட்டத்தை அப்படியே போதிக்க முனையாது கலைத் திட்ட குறிக்கோள்களைச் சிறார்கள் அடையத்தக்கதாக ஒரு வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் அவசியமாகின்றது. வேலைத்திட்டம் அமைதல் மிக இலகுவான பணி அன்று அனுபவம் மிக்க ஆசிரியர்கள் திட்டமிட்டு முயற்சிக்கும் போது அது சாத்தியம் ஆகின்றது. ஓர் ஆசிரியர் தயாரித்த வேலைத்திட்டம், இன்னோர் ஆசிரியனுக்கும் பொருந்தாது இருக்கக்கூடும்; எனினும் தாமாகவே வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதில் போதிய அனுபவம் இல்லாதவர்கள் - திட்டமிட்டு வடிவமைக்கப் பட்ட வேலைத்திட்டங்களைப் பார்க்கும் போது தன்னை வளம் படுத்திக் கொள்வது இலகு ஆகும். இந்நோக்கோடு முன்பள்ளிக் கலைத்திட்டம் வேலைத்திட்டம் ஆக்கப்பட்டு உள்ளது. இவ் வேலைத்திட்டம்கலைத்திட்டக்குறிக்கோள்களை அடைவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட ஓர் உதாரணமாகவே கொள்ளவேண்டும் வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களை மாணவர் அடைவதற் காக ஆசிரியர் தமக்குப் பொருத்தமான செயற்றிட்டங்களைத் தெரிவு செய்ய சுதந்திரமுண்டு என்பதை உணர்வோமாக;

கலைத்திட்டமானது எவற்றைக் கற்பிக்கவேண்டும் என் பதை யாருக்கும் பொதுவாகக் குறிக்கும். வேலைத்திட்டமானது கலைத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை எவ்வாறு? எப்போ? எவ்வளவு காலத்துள் கற்பிக்கப்பட வேண்டியுள்ளது என்பது போன்ற அம்சங்களை உள்ளடக்கிய ஒரு திட்டமாக குறிப்பிட்ட ஆசிரியரால் தயாரிக்கப்பட்டதாக இருக்கும்.

பள்ளி முன் கல்வித்திட்டத்தை 44 செயற்றிட்டங்களாக்கி அவற்றை வேலைத்திட்ட வடிவாக்கி உள்ளோம். அச் செய் திட்டத் தலைப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இந்தச் செய் திட்டங்களினூடாக கலைத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள குறிக் கோள்களை மாணவர் அடைய வழி நடத்துவோமாக!

# வாராந்த செய்திட்டங்கள்

01) எமது வகுப்பறையைப் பேணுவோம்
02) எமது வகுப்பறைச் சுற்றாடலைச் சுத்தமாகப் பேணுவோம்
03) பாடசாலைப் பூந்தோட்டத்தைப் பராமரிப்போம்
04) சூழலில் மரங்களை வளர்ப்போம்
05) எமது உறவினரை நேசிப்போம்
06) எமது அயலவரை நேசிப்போம்
07) சூழலில் வாழும் பறவைகளைப் பயன்படுத்துவோம்
08) சூழலில் வாழும் மிருகங்களை நேசிப்போம்
09) பள்ளிக்கூட உபகரணங்களைப் பேணுவோம்
10) பள்ளிக்கூடத் தளபாடங்களைப் பேணுவோம்
11) வீதி விபத்திலிருந்து விலகி இருப்போம்
12) சத்துணவு உண்போம்.
13) ஆடைகளைப் பயன்படுத்துவோம்.
14) அணிகளைப் பயன்படுத்துவோம்.
15) எங்கள் மொழியைப் பேசுவோம்.
16) ''நாம் தமிழர்" உணர்வு கொள்வோம்.
17) தேச உணர்வு கொள்வோம்.
18) நாங்கள் விளையாடுவோம்.
19) ஊர்வனவற்றைப் புரிந்து கொள்வோம்
20) விழாக்கள் கொண்டாடுவோம்.
21) வீட்டு வேலைகள் செய்வோம்;
22) நண்பர்களைக் கொள்வோம்.
23) வழிபாடுகள் செய்வோம்.
24) தொழிலகம் அறிவோம்,
25) நமக்குதவுவோரை மதிப்போம்.
26) எமது சூழல் - நிலம் காப்போம்.
27) எமது சூழல் ஆகாயம் காப்போம்
28) எமது சூழல் நீரைக் காப்போம்
29) நீதிக் கதைகள் கேட்போம்
30) பயனுள்ள பொழுது போக்குவோம்
31) வகுப்பறையை அலங்கரிப்போம்
32) அழகுப் பொருள் செய்வோம்
33) சித்திரம் கீறுவோம்
34) கண்காட்சி நடத்துவோம்
35) இசை நிகழ்ச்சி செய்வோம்
36) நாடகம் நடிப்போம்
37) நீதிக் கதைகள் சொல்வோம்
38) கலை விழாக் கொண்டாடுவோம்
39) சமூக சேவை செய்வோம்

40) பண்டிகை கொண்டாடுவோம்
41) கல்விச் சுற்றுலா செய்வோம்
42) பெரியோரைப் பணிவோம்
43) விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவோம்

முன்பள்ளிக் கல்விக்கலைத்
திட்டம் - பதிப்புரிமையுடையது

5667-

எழுத்தாக்கம்;- திரு: ச. சுப்பிரமணியம் — பிரதிக்கல்விப்பணிப்பாளர், திட்டமிடற் பகுதி, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்

ஆலோசனை- திரு: இ. சிவானந்தன் — பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்

131556

★★
★★